Registered No. M. 1761. 238

HEALTH AND INFANT WELFARE

An Anglo-Tamil Monthly

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை

Editor: Dr. Mrs. Anna Thomas
பத்திராதிபர்: டாக்டர் அன்னாதாமஸ் அம்மாள்

1 JUL 1923

Vol. I JUNE-1923 No. 3

CONTENTS

		Page
1.	AN APPRECIATION.	49
2.	PUBLIC HEALTH ADMINISTRATION OF TO-DAY by Dr Priestly, B. A., M. D. D., Ph.	49
3.	BOOKS REVIEWED	51
4.	EXCHANGES	53
5.	பிள்ளை பாதுகாக்கும் முறை	55
6.	பத்திராதிபர் குறிப்புகள்	57
7.	வீடும் மனையும்	61
8.	சிசு மரணம்—P. G. T.	64
9.	பெற்றோர் கடமை	66
10.	ஓர் பெண்மணியின் கடிதம்	70
11.	மதிப்புரைகள்	71

All Rights Reserved.

Subscription Rs. 3 per annum. Single copy 6 As.

சந்தா வருஷம் 1-க்கு ரு 3; பிரதி 1 க்கு அணா 6.

'GRAMAPARIPALANAM'

Popular Tamil Fortnightly specially intended for the uplift of Villages and Village Officers.

TINNEVELLY NEWS A SPECIALITY.

EDITOR: P. S. ACHARYA. Subscription: Rs. 5/-

THE GRAMAPARIPALANAM OFFICE,
TINNEVELLY.

The Tinnevelly District Co-oerative Baning Union, Ltd.

(Registered under India Act II of India)

The Government have anthorised the Investment in this Bank of Local and Municipal Funds.

Fixed Deposits at favourable rates.
Current Deposits at 3 p c per annum on daily balances
Savings Deposits at 6 p. c. per annum on daily balances.
Recurring Deposits

For further particulars please apply to:

T. S. Kanthimathinatha Pillai
J. S. Gunaratnam Pillai
Secretaries & Treasurers.

SHUNMUGAM & Co.,

Head Office, Palamcottah.

Dealers in Arms, & Ammunitions, Chemists, Druggists, & General Merchants,

Branches :—

P. S. SUNDARAM & Co., General Merchants, South Car Street, Tinnevelly Town.

SHUNMUGAM & Co., Wine & General Merchants, Tenkasi.

SHUNMUGAM & Co., General Merchants, Trichendur.

Cheapest houses for Patent Medicines & Drugs Prescriptions are dispensed carefully by qualified compounder.

P. K. SANKARAN PILLAI,
Proprietor & Municipal Councillor, Palamcottah.

Advertisement Rates

	One month	3 ms.	6 ms	12 ms.
For full page	Rs. 25	Rs. 70	Rs. 120	Rs 220
„ half page	„ 15	„ 40	„ 70	„ 130
„ quarter page	„ 8	„ 20	„ 40	„ 80

Special rates will be allowed for long standing advertisements for which please refer to the Manager.

[illegible]

I am sure "Health and Infant Welfare" will be widely read and appreciated by all those interested in child welfare work and spread much useful knowledge amongst the mothers of this Presidency. I wish this magazine all success.

Marie Willingdon

[illegible] 1923

"ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்' என்ற பத்திரிகை பலராலும் வாசிக்கப்படுமென்றும்' பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருதுவோர்களால் நன்கு மதிக்கப்படுமென்றும், இந்த ராஜதானியிலுள்ள தாய்மார்களுக்குள் சிறந்த பயன் தரத்தக்க அறிவைப் பரவச்செய்யுமென்றும் நான திட்டமாய்ச் சொல்லக்கூடும். இந்தப் பத்திரிகை எல்லா நலமும் பெறவேண்டுமென்று விரும்புகிறேன்.

மார்ச்சுமீ 1923. மேரி வில்லிங்டன்.

Mead Bicycles!

As you may know cycling promotes health and beauty.

To use MEAD Bicycles is at once a source of unmixed benefit & unalloyed pleasure.

A MEAD user will declare "MEAD" and "Dependability" are convertible terms.

If you are in need of a bicycle inquire for MEAD at:

Ram Pal & Co., Ltd.,
Sub-Agents for Mead Cycles,
TINNEVELLY

HEALTH AND INFANT WELFARE

VOL. I JUNE, 1923 No. 3

APPRECIATION

It gives us no little pleasure to state that the *Zamindar* of Andippatty has become a patron of our journal and that he has signified the event by forwarding us a handsome donation. Dewan Bahadur, S. Rm. M. Ct. Pethachi Chettiar, M. L. C. is a wellknown philanthropist and public man who takes a keen interest in all movements that have for their objective the public weal and we trust that his example of encourging this journal will be emulated by his brother *Zamindars* all over the presidency.

PUBLIC HEALTH ADMINISTRATION OF TO-DAY

by DR. JOSEPH PRIESTLY, B. A., M. D., D. PH.

The activities connected with the public Health Department of a sanitary or local authority are many and the day has gone by when such activities were restricted to providing the inhabitants with pure air, pure water and pure food. Many different administrative duties are now included and such duties are not only of a preventive character, but may also, in part, include treatment. There can be no efficient public health administration without the inclusion of the following departments in the form of schemes (1) maternity and child welfare

(2) Tuberclosis (prevention and treatment) (3) Venereal diseases (prevention and treatment) (4) Infectious diseases (prevention and treatment) (5) Housing (6) General sanitary work, (cleansing and dealing with refuse)

Of these No. 1 maternity and child welfare is the most important concerning as it does the very foundations of life. Every mother who faces mother-hood has a right to expect that her baby shall be born under proper conditions and that her baby when born shall have a right to live. Can a maternity and child welfare scheme be too efficient having regard to these facts? Such a maternity and child welfare scheme would include also a milk distribution or milk assistance scheme, a municipal milk depot and a pure milk supply. Welfare centres, maternity hospitals, maternity homes, mid-wives &c, all come in for consideration, as do also criches or day nurseries, infants, observation hospitals or hostels, nursery schools &c. All these institutions are needed for dealing with the child from birth (and before birth) up to five years of age when the child is handed over to the school or education authority, which should form a sort of extention of the maternity and child welfare scheme at least in so far as medical inspection and treatment of school children are concerned, with the neces-sary provision of a properly organized school, medical service and the establishment of school clinics. In this way the child passes from childhood through puberty into adult life, when it becomes one of the ordinary adult inhabitants of the District requiring the usual general sanitary supervision dealing with factories, workshops, shops, out-worker's premises &c.

Efficiency of administration of a public health department depends upon the staff, which must be sufficient as well as efficient-medical officers, inspectors (male and female), health visitors or nurses, clerks &c; whilst last but not least, a sympa-thetic and enthusiastic committee and council are a sinequa-non.

The other schemes tabulated as Nos. 2, 3, 4, 5 and 6 speak for themselves and are self explanatory by their itles.

Economy as such, must not be the main consideration as it is impossible to carry out necessary sanitory reforms without the expenditure of money—an expenditure that may prove to be an economy.

We have taken the above from the medical Annual for 1928, page 377

Editor

BOOKS REVIEWED.

"A GUIDE TO HEALTH" BY MAHATMA GANDI. (PRICE RS. 1—4—0. *in English* PUBLISHED BY S. GANESAN, TRIPLICANE, MADRAS.

This book before us is translated from original Guzurati into English by Mr. A. Ramier M A 'Prevention is better than cure' is a saying known even to our students of the lower standards, but how few are those who ever put it into practice. Though it is far easier and safer to prevent illness by the observance of laws of health, even thougtful men do not care to understand the laws of health or even when they understand do not care to bring their knowledge into practice. We would therefore recommend this book to all those who care to understand the laws of health, the careful observance of which will make any man healthy in body and pure in spirit. The chapters on food, excercise and sexual relations deserve the careful study of our present generation. Ignorance and carelessness bring all sorts of diseases to our people and in the beginning they slight their ailments and when they grow serious and complicated they run after all sorts of quaks. To such the learned author's advice is this. "In case you are forced to call in the aid of a doctor, be sure to get a good doctor, then follow the directions of that doctor strictly; do not call in another unless by advice of that doctor".

"AROGYACHANDRODYAM" (*in Malayalam*) BY MR. RAYARAPPU KURUP B A. L. T, CHALAPURAM POST, MALABAR. (PRICE RS. 1—4—0).

This is the first book of its kind in Malayalam written on the lines of the water cure system of Dr. Luis Kuhne

Mr. Kurup, author of the book before us has very clearly shown that all diseases are caused by the entry of foreign matter into the body through food and air and it is possible to expel these foreign matter by systamatic water treatment known as, 'baths'. The present writer is very glad to bear testimony to this from personal and professional experience. The symptoms of various diseases and the treatment of each are given in the book. The chapter on diet is very instructive. We commend this book to those who like to understand this new system of treatment.

"THE PRESENT POSITION OF TAMIL WOMEN" *in Tamil*

BY SRIMATHI M. MANGALAMMAL (MRS. T. P. MASILAMONY) OF JAFFNA, CEYLON

We find that a lecture delivered by Mrs Masilamony at the last annual gathering of 'All Ceylon Tamilliens conference' which met at Jaffna last year, is now printed in book-form and is before us for review. The Tamilliens have every reason to be proud of a lady like the author of this booklet and we look for the day when several Manglammals will rise up from among them. In dealing with the present condition of the Tamil women, the learned author has made an intelligent survey of the present position of the tamil ladies and has given a straight talk to the Tamil men and women setting before them a bright and inspiring ideal specially suited for women. We are glad to note that Srimathi Mangalammal is shortly starting a Tamil magazine for ladies and we wish her all success in her noble attempt. Our readers of this district will be interested to note that this lady is the daughter-in-law of Mr. Ponnambalam Pillai, retired Excise Commissioner of Travancore and President of the Sivasidbanda Sabha of Tinnevelly.

EXCHANGES

We thankfully acknowledge receipt of the following journals sent to us for exchange.

1.	The	'Lokopakari', Madras	Weekly
2.	,,	'Ideal Teacher', Madras	Monthly
3.	,,	'Samarasabodhini', Tanjore	Biweekly
4.	,,	'Desapimani', Jaffna	Biweekly
5.	,,	'Gramaparipalanam', Tinnevelly	Fortnighty
6.	,,	'Vidooshakan', Parur	Monthly
7.	,,	'Sukabivirdhani', Pondichery	Fortnighly
8.	,,	'Visvakarman-Thozhil', Madras	Weekly
9.	,,	'Indian Agriculture', Trichi	Monthly
10.	,,	'Pandyanesan', Madura	Weekly
11.	,,	'Baratakristwa Varthamani', Tinnanur	Weekly
12.	,,	'Tamil Nadu', Salem	Weekly
13.	,,	'Nadar Kulamitran', Arupukottai	Weekly
14.	,,	'Kathakoumudi', Kunnankulam	Monthly
15.	,,	'Krizhikamitran', Chittoor	Monthly
16.	,,	'Kudumbadeepam', Ceylon	Monthly
17.	,,	'Gnanaranjani' Madras	Monthly
18	,,	'Missionary Intelligence', Palamcottah	Monthly
19.	,,	'Sukodyam', Arni	Weekly
20.	,,	'Sentamil Selvi', Madras	Monthly
21.	,,	'Aryakeralam', Calicut	Weekly
22.	,,	'Tamil Vaidyam', Koilpatti	Monthly
23.	,,	'Asramapodini', Dindigul	Do.
24.	,,	'Agasthyan', Kottarakarai	Do.
25.	,,	'Mahilla', Chengannore	Do.
26.	,,	'Suthanthiran', Tanjore	Weekly
27.	,,	'Tamilarbodhini' Jaffna	Monthly
28.	,,	'Kristhava Mahilamoney', Tiruvella	Do.
29.	,,	'Prajanukoolan', Srirangam	Do.
30.	,,	'Hindu Nesan', Madras	Weekly
31.	,,	'Anandabodhini', Madras	Monthly
32.	,,	'Daivabaliktan' Kumbakonam	Do.
33.	,,	'Aryadharma', Kumbakonam	Do.

34.	The	'Paintamizh', Madras	Do.
35.	,,	'Dhakshina Mitram', Madura	Weekly
36.	,,	'Christian', Trichur	Do.
37.	,,	'Princely India', Delhi	Do.
38.	,,	'Hindu Organ', Jaffna	Do
39.	,,	'Thainadu' Trinchengode	Do
40.	,,	'Panam', Trichi	Do.
41.	,,	'Sriramakrishna Vijayam', Madras	Monthly
42.	,,	'Thamizh', Jaffna	Do.
43.	,,	'Kumaran', Karaikudy	Do
44.	,,	'Sarada', Punalur	Do.
45.	,,	'Balamitiram', Tiruvella	Do.
46.	,,	'Pothunalam', Madras	Weekly
47.	,,	'Health'. Madras	Monthly
48.	,	'Junglewallah' Madras	Weekly
49.	,,	'Sumangala', Kayankulam	Monthly
50.	,,	'The Pothunalam', Trivandrum	Weekly
51.	,,	'Darul-Islam', Madras	Monthly
52	,,	'K-Katholican', Chavara	Do.
53.	,,	'National Missionary Intelligence', Madras	Do.
54.	,,	'Sukadarabodini', Madras	Do.
55.	,,	'The Saraswathi', Madras	Do.
56.	,,	'The Academy', Madras	Do
57.	,,	'Desabimani', Quilon	Do.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்

"நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்"

"மக்கட்ப்பேற்றில்
பேரும் பேறில்லை"

பகுதி 1. 1093-ம் ௵ ஆனி ௴ 1௳ தொகுதி 3

பிள்ளை பாதுகாக்கும் முறை.

முன் 42-ம் பக்கம் தொடர்ச்சி.

குழந்தையின் ஆகாரம்.

9-மாசமுதல் 2 வயசுவரையுள்ள குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டிய ஆகாரத்தைப்பற்றிய விபரமாவது. நாம் முன்னமே சொல்லியிருக்கிற பிரகாரம் குழந்தைகளை ஒன்பதாவது மாசமானதும் ஜாக்கிரதையுடன் கொஞ்சம் கொஞ்சமாய் பால் குடிமறக்கச் செய்யவேண்டியது. 9-மாசங்களுக்குப்பின் சரியானபடி பல் முளைத்த உடன் மிருதுவாக குழைந்த சாதம் கொஞ்சம் கொடுக்கலாம். ஆனால் 2-வயசு ஆகும் வரையும் பிரதான ஆகாரம் பால்தான். என்றாலும் 9-வது மாசத்திற்குப் பிறகு பிரதான ஆகாரமாகிய பாலை கொடுத்து வருவதோடு இடையில் கொஞ்சம் கொஞசம் மிருதுவாய் குழைய வேகவைத்த சாதத்தையும் கொடுத்துவரலாம். ஐரோப்பிய டாக்டர்கள், இலேசாய் வேக வைத்த முட்டை, இறைச்சி, சூப், ரொட்டி இவைகளை கொடுக்கலாமென்று சொல்லுகிறார்கள். மாமிசம் சாப்பிடுகிறவர்கள் பத்தாவது மாசத்தில் நன்றாய் சமைக்கப்பட்ட மீன் அல்லது இறைச்சி, குழைய வெந்த உருளைக்கிழங்கு, கீரை இவைகளை ஊடே ஊடே சேர்த்துக்கொள்ளலாம். மாமிசம் சாப்பிடாதவர்களுக்கு கொஞ்சம பருப்பை நன்றாய் வேகவைத்து சாதத்தோடு கலந்தும் கீரையும் கொடுக்கலாம். ஒரு வயசு ஆன உடனே காலை ஆகாரத்திற்கு மாகாணிபடி பாலுடன் ரொட்டி அல்லது ரொட்டியும வெண்ணெயும், அல்லது கொஞ்சம இனிப்பு பதார்த்தங்கள் சேர்த்து கொடுக்கவேண்டியது. பத்து மணிக்கு சாதம் கொடுக்கவேண்டும். மாலை 5 அல்லது 6-மணிக்கு மிருதுவான

பழங்களும் அல்லது பழத்தின் ரசமும் பாலும் கொடுக்கலாம். இரவு படுக்கைக்குப்போகும்போது ஒருகப், பால் கொடுக்கவும். இரண்டாவது வயதில் மீன் பொரியல், உருளைக் கிழங்கு பொரியல், பருப்பு, சாதம், காய்கறி, பழங்கள், எளிதில ஜீரணமாகக்கூடிய இனிப்பு பதார்த்தங்கள் இவைகளை அவரவருடைய ஆகமத்திற்குத் தகுந்தபடி உபயோகிக்கலாம். நமது நாட்டில் உள்ளவர்கள் அநேகர் இந்த பருவத்தில் குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டிய பாலின்அளவை குறைத்துவிடுகிறார்கள். இந்தப் பருவத்தில்தான் குழந்தைகள் வீரியமாய் வளர்ந்து வரவேண்டியது. அப்படிப்பட்ட சமயத்தில் பாலைக் குறைக்கவேண்டியது நேரிட்டால் அதுபோல் சத்துள்ளதான முட்டை, மீன், அல்லது பருப்பு, நெய் இப்படிப்பட்ட வஸ்துக்களை சேர்த்துவரவேண்டியது பதினெட்டு மாதங்கள் சென்ற உடன் ஆரோக்கிய ஸ்திதியான ஒரு குழந்தைக்கு நாலுவேளை ஆகாரம் போதுமானது. குழந்தை தன் ஆகாரத்தை மெதுமாக நன்ருய் மென்று சாப்பிடும்படி பழக்கப்படவேண்டும். ஆகாரம் சாப்பிட்டு முடியும் வரை தண்ணீர் குடிக்க விடக்கூடாது. அப்படி இடையில் தண்ணீர் குடித்தால் போதுமான ஆகாரம் சாப்பிடமுடியாது. குழந்தைகளுக்கு இறைச்சி கொடுக்கும்போது பொடி துண்டுகளாக கொத்தி சமைத்து கொடுக்கவேண்டும். அதுவும் சிறு குழந்தைகளுக்கு ஒருநாளைக்கு ஒரு தடவலுக்குமேல் கொடுக்கக்கூடாது. குழந்தைகள் 9-வது 10-வது மாசங்களில் தானுகவே தமிளரிலிருந்து தண்ணீர் குடிப்பதற்கு பழக்கப்படவேண்டும். சில குழந்தைகள் சாதாரணமாய் 10-வது மாசத்தில் அப்படி தண்ணீர் குடிப்பதை பார்க்கலாம், வேறு குழந்தைகளுக்கு 14, 16, 18 மாசங்கள் வரையிலுங்கூட தானுக தண்ணீர் குடிப்பது கஷ்டமாகவிருக்கும். குழந்தையின் தாயார் அதை படிப்பிக்கவேண்டும்.

இரண்டு வயசுக்குப்பிறகு குழந்தையின் ஆகாரம். குழந்தைகளுக்கு இரண்டு வயசானவுடன் கொடுக்கவேண்டிய ஆகார பதார்த்தங்களை மாசாமாசம் கொஞ்சம் கொஞ்சமாய் கூட்டிவரவேண்டும். அப்படிச் செய்வதினுல் சாப்பாடானது நேரத்துக்கு நேரம் வித்தியாசமான வகைகளுடன்கூடிய தாயிருக்கும்படியாகும். வீட்டில் பெரியவர்கள் எல்லாரும் சாப்பிடக்கூடிய ஆகாரங்களை சிசுக்களுக்கு கொடுக்கக்கூடாது. பழுக்காத பழங்கள, பாற்கட்டி முதலிய இன்னும் பல, ஜீரணமாக கஷ்டமான உணவுப்பொருள்களை சிறு குழந்தைகளுக்கு கொடுக்கவே கூடாது. குழந்தைகள் இனிப்புப் பதார்த்தங்களின் பேரில் அதிக ப்ரீதியாயிருப்பார்கள். அதையும் கூடுமானவரை குறைத்தே கொடுத்து வரவேண்டும். காப்பி, தேத்தண்ணீர் பானங்களை குழந்தைகளுக்கு கொடுக்கவேகூடாது.

குழந்தைகள் பசியாயிருக்கும்போது தரையில் காணும் எதையும் எடுத்து வாயில் போட்டுக்கொள்ளும். அப்படிச் செய்வதினுல் அனே

சம் விதமான கேடுகள் விளைகிறதற்கு காரணமாகிறது. ஆகையால் அப்படிச் செய்யாதபடி அடிக்கடி தடுத்துக் கொள்ளவேண்டும். குழந்தை ஆகாரத்தை தன் கையினால் எடுத்து சாப்பிடக்கூடிய பிராயம் வந்த வுடனே சாப்பிடுமுன் கையை நன்ருய் சுத்தஞ் செய்யவேண்டும்.

முதலில் ஆகாரத்தை சாப்பிட்டு கடைசியாக தண்ணீர் குடிக்க வேண்டுமென்கிற பழக்கத்தை குழந்தைகளுக்கு சிறுவயசிலேயே நன்ருய் கற்பிக்கவேண்டும். தொண்டை அதிகமாய் உலர்ந்துபோனால் 2, 3, மடக்கு தண்ணீர் குடித்த பின் ஆகாரம் சாப்பிட்டு கடைசியாய் மீதித் தண்ணீரை குடிக்கவேண்டும் குறிப்பிட்ட நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் ஒருவித சாப்பாடும் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படி சாப்பிடுவதினால் பல வியாதிகளுக்கு இடமாகும். குழந்தைகளுக்கு 2-வது வயசிலிருந்தே சாப்பாட்டு நேரம் முதலிய முறைகளை ஒழுங்காய் அநுசரிக்கும்படி கண்டிப்பான ஏற்பாடுகள் செய்துவரவேண்டும்.

(தொடரும்)

பத்திராதிபர் குறிப்புகள்

பிழைதிருத்தம்.

மேலீத்து சஞ்சிகையில் 46-வது பக்கம் 8-வது வரியில் "வேண்டாம்" என்பதை "வேண்டும்" என்று திருத்திக்கொள்ளவேண்டியது

* * *

போஷகர்.

ஆண்டிப்பட்டி ஜமீன்தார் திவான்பகதூர் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் M. L. C. எமது பத்திரிகைக்கு ஓர் போஷகராக சம்மதித்து மிக்கு அன்புகூர்ந்து பத்திரிகையின் ஆதரவு வகைக்கு தகுந்த பண உதவி புரிந்ததற்காக மிகவும சந்தோஷப்படுகிறோம்.

பொது ஜன ஊழிய விஷயமான எல்லா நற்காரியங்களிலும முன்னேறி உதவி புரியும தயாளகுணம் நிறைந்த நமது போஷகர் அவர்களுக்கு எங்களுடைய மனப்பூர்வமான வந்தனம் உரிமையாவதுடன் நீண்டாயுளும் சுகவாழ்வும் உண்டாகும்படி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

எமது போஷகர் அவர்களின் உருவப்படம் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

* * *

எங்களுடைய சக ஜீவிகள்.

தற்காலம் நடைபெற்று வரும் பல பத்திரிகைகளிலும் எமது பத்திரிகையைப்பற்றி பலவகையாக மதிப்புரைகள் வரைந்து எங்களை உற்சாகப் படுத்தி வருகின்றனர். அவரவர் தங்கள் தங்களுடைய பத்திரிகைகளையும் எங்களுக்கு அனுப்பியுள்ளார்கள். நாங்களும் சிலவற்றிற்கு முறைப்படி மதிப்புரை வரைந்துள்ளோம். இடம் ஸ்வல்பமானதால் மீந்ததை அடுத்த சஞ்சிகையில் வரைவோம். சாதாரணமாய் ஒரு பத்திரிகை நடத்துவதானது எளிதன்று. அதிலும் எமது பத்திரிகைபோன்ற சாங்கேதிகமான ஒரு பத்திரிகையை நடத்துவதில் கஷ்டமுண்டென்பது பலருக்கும் தெரிந்த விஷயம். இவ்வித கஷ்டங்களை சிறிதும் பாராட்டாமல் பத்திரிகையை நடத்தி வருவதற்கு போதுமான உற்சாகத்தை தருவதான மதிப்புரைகள் வரைந்துள்ள பலருக்கும் எங்கள் உரித்தான நன்றி அளிக்கிறோம்.

நிற்க, எங்களுடைய முதலாவது சஞ்சிகையில் பிரசுரமாக்கப்பட்ட "பெற்றோர்கள் தெரியவேண்டுவது" என்னும் விஷயத்தை நமது சக ஜீவியாகிய "பாரத கிறிஸ்தவ வர்த்தமானி" மலர் 2. இதழ் 36-ல் 3-வது பக்கத்தில் எங்கள் பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதினதாக தெரியப்படுத்தாமல் அதிலிருக்கிறபடியே பிரசுரம் செய்திருக்கிறது பத்திர தர்மத்திற்கு விரோதமானது என்று தெரியப்படுத்த நேர்ந்ததைப்பற்றி மிகவும் விசனிக்கிறோம்.

* * *

வந்தனம்

எங்களுடைய பத்திரிகையை தமிழ் வழங்கிவரும் பல ஜில்லாக்களிலுமுள்ள முனிஸிப்பாலிட்டிகளுக்கும் லோக்கல் போர்டுகளுக்கும அனுப்பி அவர்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் உபயோகிப்பதற்காக சில பிரதிகளை வாங்குமபடி கேட்டதில் அனேகர் அவரவர்கள் ஆவசியத்திற்குத் தக்கபடி ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, நான்கோ, ஐந்து பிரதிகள்வரை அனுப்பும்படி எங்களுக்கு எழுத்து மூலமாய் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வகை உதவிக்கு அவர்களுக்கு மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறோம்.

* * *

செல்வம் சந்தோஷத்தைக்கொடுக்குமா?

நானது 1923-ம் ஞு மேமீ 11-யென்று சென்னை மெயில் பத்திரிகையில் பிரசுரமாக்கப்பட்ட தந்திச்செய்தி மூலமாய் பின்வருமாறு அறியப்படுகிறது. அதாவது அமெரிக்கா தேசத்தில் ஜர்கிபாரகேன்

(United States) என்று சொல்லப்படும் மாகாணத்தில் கடந்த 12 மாசங்களுக்குள் தற்கொலை செய்து கொண்ட 1,20,000 பேர்களில் 79 லக்ஷாதிபிரபுக்களும் 46 ஐசுவரியப் பெண்களும் 88 பாலகர்களும் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாரிலும் பெரியவர் 100 வயசுள்ள ஓர் பாட்டியும் சிறியது 5 வயசுள்ள ஓர் குழந்தையுமாம். இன்னும் 38 கலாசாலை மாணவரும் 50 கலாசாலை புரொபெசர்களும், உபாத்திமார்களும்; 19 உபதேசிகளும் பிரசங்கிகளும் 52 வக்கீல்களும் நியாயாதிபதிகளும் 84 வைத்தியர்களும் 100 பிரசிடெண்டுகளும், வியாபாரத் தலைவர்களும் பாங்கு பிரசிடெண்டுகளில் அநேகருமாக இருக்கின்றனர். பாங்கு பிரசிடெண்டுகளில் ஒருவர் பத்துமுறை தற்கொலைபுரிய யெத்தனித்தும் சித்திபெறாமல் பதினோராம் முறையில் உயிர்விட்டார். தலைமயிர் உதிர்ந்துபோனதற்காக மனம்பொறாமல் உயிர்விட்டாள் ஓர் இளமாது. கால்வ் (golf) என்னும் பந்தாட்டம் கூடாதென்று நிறுத்தப்பட்டதனால் உயிர்விட்டான் ஒரு துரைமகன். பிரயாணம் போனதில் இருமுறை ரெயில்தப்பி பிரயாணம் தடைப்பட்டதற்காக தற்கொலை புரிந்தாள் ஒரு ஸ்திரி. உலகத்தின் முடிவுகாலம் சமீபித்துவிட்டதேயென்று பயந்து உயிரிழந்தானும் ஒரு மனிதன். மற்றொருவன் ஓர் பூனைக்கு வழக்காடியதால் உயிர் துறந்தான். மொத்தம் தற்கொலை புரிந்தவர்களில் மூன்றிலொரு பங்கு பெண்மணிகளாக விருக்கின்றனர். இவ்விதம் நடக்கையில் பணத்தினால் நமக்கென்ன பாக்கியமிருக்கிறது என்று சிந்தித்துப்பாருங்கள். மானிடருக்கு நோயற்ற வாழ்வே அரும் பெரும சிலாக்கியம் 'நோயற்ற சரீரத்துள் மாசற்ற மனம்' என்பது ஓர் ஆங்கில பழமொழி. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமன்றி ஐஸ்வரியம அவ்வித செல்வமாகமாட்டாது. ஆகையால் மானிடப்பிறவி யெடுத்த நம்மவரெல்லாம் நோயற்ற வாழ்வைப் பெறுவதற்கே வெண்டும் முயற்சி செய்யவேண்டும். அதாவது நாம் ஒவ்வொரு நாளும் ஆரோக்கிய விதிகளை சரிவர அனுசரித்து வருவதோடுகூட ஏகப்பரம்பொருளாகிய கருணாநிதிக்கடவுளை அந்தரங்க உண்மையோடும் விசுவாசத்தோடும் போற்றி வணங்கிவரவேண்டும். அமெரிக்கா தேசத்தில் ஐக்கிய நாடுகளில் உள்ள முற்கூறப்பட்ட ஜனங்களோ ஏகப் பரம்பொருளை மறந்தவராய் கேவலம் மானிடராலிட்டப்பட்ட பணப்பொருளையே கடவுளாக நினைத்து போற்றிவந்ததில் அவர்களுக்குக் கிடைத்த பாக்கியந்தான் என்ன? தாங்களடைந்த நிர்ப்பாக்கியமான தற்கொலைகளேயன்றி பிறிதொன்றுமில்லை. இஃதிங்ஙனமிருக்க நம்மவர்களோவெனில் தங்களுடைய தேக ஆரோக்கியமோ, கடவுள் வழிபாடோ, ஜீவிய தத்துவங்களோ, சமுதாயமோ, சன்மார்க்கமோ, உண்மையோ, இவற்றுள் ஒன்றையேனும், அல்லது அவ்வளவையேனும் இழந்தாலும் தங்களுக்கு காசுகிடைப்பதே குறியெனக்கருதி எப்பொழுதும் காசுகாசெனக் நடிக்கின்றனர். நமது ஏஜெண்டுகளில் ஒருவர் ஒரு வியாபாரியிடத்தில்

சென்று "ஐயா, தாங்கள் இப்பத்திரிகைக்கு ஓர் சந்தாதாரராகச் சேர்ந்து இதனை வாசித்துவரவேண்டு"மென்று கேட்டதற்கு "நான் அதிகாலை தொட்டு இரவில் வெகுநேரம்வரையில் கடைச்சோலியாய் காத்துக்கிடப்பவனுக்கு இவ்வாரோக்கியப் பத்திரமெல்லாம் எதற்கய்யா. வாசிப்பதற்கும் நேரமிராதே" என்று விடையளித்தனராம். இந்த நண்பரது நோக்கத்தைப்பாருங்கள், நமது நண்பரும் இவர்போன்ற ஏனையோரும் நாம் முற்கூறிய அமெரிக்கா தேசத்து வியாபாரிகளுக்குக் கிடைத்த அநியாயத்தை அறிந்து சீர்திருத்தம் அடைந்துகொள்ள முயற்சி செய்யட்டும். இடைவிடாத வேலையுள்ள நமது நண்பருக்கு தானும் தனது வீட்டாரும் ஆரோக்கிய முறைகளைச் சிந்தித்து அனுசரித்து வருவதற்குப்போதுமான நேரத்தை அளிக்கும்படி எல்லாம் வலல இறைவன் அருள்புரிவாராக!

* * *

வியாபாரிகளும் ஆரோக்கியமும்

நமது நாட்டிலுள்ள வியாபாரிகள் தங்கள் ஆரோக்கியத்தை கொஞ்சமேனும் கவனிக்காதிருப்பதை நினைக்கும்போது பரிதாபமாயிருக்கிறது. இவர்களுக்குத் தேகாப்பியாசம் என்பதே தெரியாது. சதாகாலமும் உட்கார்ந்திருந்தே காலத்தைப் போக்குகிறார்கள். நமது நாட்டில் வியாபாரம் நடத்திவரும் ஐரோப்பிய வர்த்தகர்கள் அநேகர் சாயங்காலமானதும் தங்கள் சரீர உழைப்புக்கு வேண்டிய அப்பியாசங்களை ஒழுங்காய் செய்துவருகின்றனர். நமது வர்த்தகர்களோ இடுக்கமானதும் காற்றோட்டமில்லாததுமான தங்கள் கடைகளிலேயே பலவித சாமான்களுக்கிடையில் இரவில் வெகுநேரம்வரையிலும் உட்கார்ந்தேயிருக்கிறார்கள். சுத்த ஆகாயம் அவர்கள்மேல் படுவதற்கே இடங்கிடையாது. தங்கள் ஜோலிவிட்டு கொஞ்சமும் விலகுவதேயில்லை. சரீரத்திற்கு உழைப்பும் கிடையாது. அவர்களுக்கு இளைப்பாறுதலோ தாங்கள் வியாதியில் அகப்படுங்காலத்தில்தான். மற்றகாலங்களில் தெரியவே தெரியாது. சாப்பாட்டு விஷயத்திலோ ரொம்ப ஒழுங்கீனம். அகால போஜனமே அவர்களுக்குப் பிரதானம். அநேகம் வியாபாரிகள் நீரிழிவு, க்ஷயம், குன்மம் முதலிய பலவகை கொடிய வியாதிகளில் கஷ்டப்படுவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்கள் பின்னால் ஏதோ சாவகாசமாய் வியாதியை குணப்படுத்திக்கொள்ளலாமென்று அசட்டையாய் தங்கள் வர்த்தகத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வருகிறார்கள். இவர்களுக்குச் சாவகாசம் எப்போததான் வருமோ தெரியவில்லை அதுவரை வியாதியானது அவர்களைச் சும்மா விட்டிருக்குமா? அநேகரை மண்ணுலகினின்றும் விண்ணுலகுக்கு அனுப்பிவிடுகிறது. சிலர் எல்லாம் விதியின்படியே நடக்குமென்று சொலலி வியாதியைக் கவனியாமல் சும்மாயிருந்துவிடுகின்றனர். வியாதியை விலக்க விதியால் ஆகுமா? இப்படிப்பட்ட தப்பான எண்ணங்களையெல்லாம் விட்டுவிட்டு எல்லாம்வல்ல இறைவனை

முன்னிட்டு ஆரோக்கிய விதிகளை நன்குணர்ந்து அனுசரித்துவர முயற்சி செய்வார்களென்று நம்புகிறோம்.

* * *

இவர்கள் விஷயம் இங்ஙனமிருக்க இவர்களது மனைவிமக்களைப்பற்றி சிந்தித்துப் பார்ப்போம். வியாபாரத்தொழில் அமர்ந்துள்ள கடை முதலாளியோ அல்லது மற்றும் வேலைக்காரரோ இவர்கள்தான் வியாபாரத்தில் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டி காலை தொட்டு இரவு நடுச்சாமம்வரை கடையில் காத்துக்கிடந்து அகால போஜனம் அருந்தி கொடும் வியாதிகளுக்குள்ளாகின்றார்கள் என்றால் இவர்களது மனைவிமார்களும் அகால போஜனம் அருந்தி வருந்துகின்றார்களே! ஏன்? நமது நாட்டில் பலருள்ளும் விசேஷமாய் இந்துக்களுக்குள் ஓர் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது தங்கள் புருஷர்கள் சாப்பிடு முன்னர் ஸ்திரீகள் சாப்பிடவே கூடாதாம். புருஷர்கள் சாப்பிட்ட பிறகு தான் ஸ்திரீகள் சாப்பிடவேண்டுமாம். இவர்களும் அவ்வழக்கத்தை வெகு வைராக்கியத்துடன் அனுசரித்து வருகிறார்கள். ஆதலினால் பகலிலோ இரவிலோ எவ்வளவு நேரமானாலும் எவ்வளவு பசியாயிருந்தாலும் தங்கள் புருஷர் வரும்வரை காத்திருக்கவேண்டும். புருஷர்கள் கடைகளிலிருந்து இரவு 1 மணி 2 மணிக்கு வந்து சேரும்வரை ஸ்திரீகள் நன்றாய் நித்திரைசெய்துவிட்டு பின்னர் அவர்கள் வந்தவுடன் எழுந்திருந்து அவர்களுக்கு வேண்டிய உபசாரணைகள் செய்து சாப்பாடு செய்துவைத்தபின் தாங்கள் சாப்பிடுகிறாகள். இவர்கள் இப்படிச் செய்கிறதினால் இவாகளுக்கு ஜீரணசக்தி நாளடைவில் குறைந்து பல வித வியாதிகளுக்காளாகிறார்கள். இத்தகைய பூமான்களுக்கும் ஸ்திரீகளுக்குமாக ஜெனிக்கும் குழந்தைகளுடைய தேகாரோக்கியத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா! கடைகளில் ஜோலிபார்க்கும் ஆண்களும் அவரது பெண்களுமே இங்ஙனம் நடக்கிறார்கள் என்றல்ல. ஏனைய பலரும் இவ்விதம் நடந்து தங்கள் சரீராரோக்கியத்தை கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இதனால் நம் சந்ததிகள் தேகபலம் குன்றி வாழ்நாட்களை குறைத்துக்கொள்ளாவண்ணம் பலரும் முயற்சித்து ஆரோக்கிய விதிகளை அனுசரித்து நன்மையடைய தவறாதிருப்பார்களென்று நம்புகிறோம்.

வீடும் மனையும்

டாக்டர் K. தம்பி M. D.

நாம் வீடு கட்டும்பொழுது வீட்டைச் சுற்றிலும் காலியிடம்போட்டு கட்டவேண்டும். வீடு கட்டப்படும் இடத்தைப் பார்க்கிலும் காலியாய்

விடப்படும் இடம் அதிக விஸ்தீரணமாயிருக்கவேண்டும். வீட்டில் மேல்மெத்தை வைத்து கட்டுகிறதானால் காலியாக விடப்படும் இடம் இன்னும் அதிக விஸ்தீரணமாயிருக்கவேண்டும். ஈரமுள்ள இடங்களில் வீடு கட்டக்கூடாது அப்படி கட்டப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் காய்ச்சல் முதலிய ஓயாத வியாதிகளுக்கு ஆளாவார்கள் நாம் ஈரமான தரையில் அடிக்கடி நடப்போமானால் நமக்கு வயிற்றில் பலவிதமான தொந்தரவுகள் உண்டாவதுடன் ஜலதோஷம் சதா காலமும் நம்மை விட்டு நீங்காது. அப்படி ஈரமுள்ள இடத்திலேயே ஒருவர்க்கு வீடு கட்டவேண்டியது நேரிட்டால் நீரூற்றானது மேலே வாராதபடி தளமட்டத்தை உயர்த்திக் கட்டவேண்டும். தண்ணீரை இழுக்க சக்தியில்லாத சாமான்களை கொண்டும் கட்டவேண்டும். எப்பொழுதும் மேடான இடங்களில் வீடு கட்டுவது நல்லது. வீட்டின் பக்கத்தில் சதுப்பு நிலங்களும் தண்ணீர் குட்டங்களும் இருக்கவேகூடாது நல்ல காற்று வீசக்கூடிய இடமாக இருக்கவேண்டும். வீட்டிலுள்ள அரைகளில் படுக்கை அறையானது மற்ற அரைகளைவிட விசாலமானதாகவும் உயரமானதாகவும் இருக்கவேண்டும். வீட்டைச சுற்றி அகலமான விராந்தா போடுவது நல்லது, இது வெளியிலிருக்கும் உஷ்ணததை உள்ளுக்கு வரவிடாமல் செய்வதுடன் ஏராளமான சுத்த ஆகாயத்தை உள்ளுக்கு வரச்செய்கிறது. வேலைக்காரர்களுடைய ஜாகைகள் பிரத்தியேகமாயிருக்கவேண்டும். சமையலறையானது பிரதான கட்டிடத்தை விட்டு கொஞ்சம் விலகியிருக்கவேண்டும். வீட்டின் அஸ்திவாரமானது காங்கிரீட் போட்டு உறுதியாக கட்டப்படவேண்டும். மழை ஏராளமாய் பெய்யக்கூடிய இடங்களில் வீடு கட்டும்பொழுது நீரூற்றை தடுத்துக்கொள்வதற்கு போதுமான ஏற்பாடு செய்து கட்டவேண்டும். ஒரு செங்கலானது 16 அவுன்ஸ் தண்ணீரை இழுப்பதற்கு சக்தியுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது நீரூற்று வாராதபடி தடுக்க போதுமான ஏற்பாடுகள் செய்துகொள்ளாவிட்டால் தளமட்டத்திற்கு மேல் சுவரில் 3 கெஜம் உயரம் நீர் கசிந்து நிற்பதை காணலாம். அப்படி கசிந்து நிற்கும் நீரோடு தரையிலுள்ள உப்புச் சத்தானது மேலே வந்து பரவி நின்று சுவ காய்ந்தவுடன் செங்கல்களை அரித்து கெடுத்து விடுகிறது. இதற்குத்தான் சுவரில் உவர் அடிக்கிறதுயென்று சொல்லப்படுகிறது. பின் சொல்லுகிறபடி வார்னிஸ் தயாரித்து அஸ்திவாரத்தில் அடித்துவிட்டால் நீரூற்று வரவொட்டாமல் தடுக்கலாம். நாலு பவுண் துரிசை 12 காலன் தண்ணீரில் கொதிக்கவைத்து 2 பவுண் கோந்து 10 பவுண் தெளிக்கப்பட்ட சிவப்பு அல்லது மஞ்சள் நிறமான மண்ணும் 8 பவுண் ரை மாவும் (Rye flour) 7 பவுண் சீமையெண்ணெயும் (Linseed oil) சேர்த்து குளப்பி வேனீர்க்காலத்தில் சுவரில் அடிக்கவேண்டியது. அவசியமானால் அதன்மேல் வெள்ளையும் அடித்துவிடலாம். சதுப்பு நிலத்தில் வீடு கட்டவேண்டியது நேரிட்டால் வீட்டையும் மனையையும் சுற்றி பல

மான கம்பவுண்டுச் சுவர் கட்டவேண்டும். அப்படிப்பட்ட சுவரில் தார் பூசப்பட்ட செங்கல்களைக் கொண்டு கட்டவேண்டும். செங்கல்களை நன்றாய் சூடு உண்டாக்கி லேசான தார் நிறைந்த பாத்திரத்தில் போட்டு யெடுத்து மேல்படி செங்கல்களை சிறிதுகாலம் பூமிக்குள் மூடிவைத்து அப்புறம் யெடுத்து கம்பவுண்டுச் சுவர் கட்ட உபயோகப்படுத்தவேண்டும்.

மழைகாலத்தில் வீட்டின் கூரைத் தண்ணீர் வீட்டைச் சுற்றியிருக்கிற காலி மனையில் விழுந்து கெட்டி நின்று கொசு, ஈ முதலியவை மொய்க்காதிருப்பதற்காக வேண்டி அந்த மழை ஜலம் கட்டிநிற்காமல் விரைவாய் ஓடிவிடும்படி வீட்டைச்சுற்றி சரியான சிறு வார்கால் கட்டிவிடவேண்டும். வீட்டின் பக்கத்தில் பெரிய மரங்களிருப்பது உசிதமல்ல. ஏனெனில் அவைகள் வெளிச்சத்தையும் காற்றையும் வீட்டினுள் வரவிடாமல் தடுப்பதோடு மழைகாலத்தில் நீரூற்று உண்டாவதற்கும் ஏதுவாக இருக்கிறது. ஒருவீட்டில் ஏராளமான காற்றிருக்கவேண்டுமானால் பெரிது பெரிதான அகன்ற ஜன்னல்கள் அநேகம் இருக்கவேண்டும். வீட்டின் அறைகளுக்குள் இருக்கப்பட்ட அசுத்தமான ஆகாயம் வெளிச்செல்வதற்கு சுவரின் உச்சியில் கூரைக்கு அடுத்தாற்போல் சிறு சிறு ஜன்னல்கள் இருக்கவேண்டும். நமது நாட்டிலுள்ள ஜனங்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து சுகாதார குறைவுள்ள இடங்களில் காற்றோட்டம் இல்லாத விதமாய்ச் சிறு சிறு அறைகள் வைத்து வீடுகள் கட்டி வாசம் செய்து வருகிறார்கள். அப்படி சுகாதார குறைவுள்ளதும் சரியான காற்றோட்டம் இல்லாததுமான வீடுகளில் வசிப்பதினால் அடிக்கடி வியாதிகளுக்குள்பட்டு டாக்டர்களுக்கு பணத்தை ஏராளமாய் செலவுசெய்தும் அகால மரணத்துக்குள்ளாகிறார்கள்.

கூரை. வீட்டின்மேல் கூரை வைப்பதானது சூரிய உஷ்ணத்தை வீட்டினுள் வரவொட்டாதபடி தடுப்பதான நோக்கத்துடன் இருக்கவேண்டும். வாசல்களுக்கும் ஜன்னல்களுக்கும் மேல் மட்டத்தில் பச்சைக் கண்ணாடி பதித்த தட்டிகள் வைப்பது நல்லது. கூரைபோதுமானபடி உயரமாயிருக்கவேண்டும். புல்லினாலாவது ஓலையினாலாவது கூரை வேய்ந்தால் சூரிய உஷ்ணத்தைத் தடுக்கும் ஆனால் கரையான், எலி, பாம்பு, தீ, இவைகளைப்பற்றி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஓடு போடுவதில் சிறு ஓடுகள் போடுவது நல்லது. நாகத்தகடு போட்ட கூரைகள் ஆரோக்கியத்துக்கு விரோதமானது. வீட்டைச்சுற்றி சிறு சிறு செடிகளை வளர்ப்பதினால் அவைகள் தரையை குளிர்ச்சியாய் வைத்துக் கொள்வதுடன் அசுத்த ஆகாயத்தை கிரகித்துக்கொள்கிறது.

ஏழை ஜனங்களால் தங்களுக்கு சிறு சிறு குடிசைகள்தான் கட்டிக்கொள்ளக்கூடும் அவைகளையும் சுகாதார விதிகளை அனுசரித்து செய்யலாம். குடிசையின் தளமட்டத்தை தரைக்குமேல் 2 அடி உயர்த்தவேண்டும்

தளம் நல்லதாகவும் உறுதியானதாகவும் செய்யப்படவேண்டும். குடிசையைச்சுற்றி விஸ்தீரணமான விராந்தா ஏற்படுத்தப்படவேண்டும். சரியான காற்றோட்டத்திற்கு வேண்டிய சாதாரண சன்னல்களும் வைக்கப்படவேண்டும்.

தொழுப்பேரை

நம்மவர்களில் அநேகர் தொழுப்பெரைகளை வீடுகளின் பக்கத்தில் ஸ்தாபிக்கிறார்கள். சிலர் வீட்டிலுள்ள சில அறைகளில் ஆடுமாடுகளை அடைக்கிறார்கள் சில இடங்களில வீட்டின் முன்பாகத்தில் மாடு கன்று களை கட்டுகிறார்கள் இதெல்லாம் கெடுதலானதும் அவ்வீடுகளில் வசிப்பவர்களுடைய ஆரோக்கியத்திற்கு விரோதமான வழக்கமும் ஆகும். ஆகையால் தொழுப்பெரையானது நாம் வசிக்கும் வீடுகளுக்கு அப்பால் தள்ளி இருக்கவேண்டும். அவைகள் அடியிற்கண்ட விதிகளை அனுசரித்தும் கட்டப்படவேண்டும்.

விதிகள். 1. தொழுப்பெரையின் தளமானது தண்ணீரை இழுக்காத விதமாய் கடினமாய் இருக்கவேண்டும். 2. தளமானது தண்ணீர் தங்கி நிற்பதற்கு இடமில்லாத விதமாய் சரிவாய் இருக்கவேண்டும். 3. மாடுகளின் மூத்திரம் எளிதாய் வெளியே ஓடிவிடும்படி சிறு வார்கால்கள் கட்டப்படவேண்டும். 4. அவ்வார்கால்களின் கடைசியில் அதாவது தொழுப்பெரையின் வெளிப்பக்கத்தில் மாடுகளின் மூத்திரம் வந்து கட்டிநிற்பதற்கு ஓர் தொட்டி கட்டப்படவேண்டும். 5. தொழுப்பெரைக்குள் நல்ல காற்று வீசுவதற்காக சுவர் அடைப்பில்லாமல் அழிப்பாச்சியிருக்கவேண்டும். 6. மாட்டின் சாணத்தை சேர்த்து வைப்பதற்குப் பிரத்தியேகமான இடம் இருக்கவேண்டும். 7. தொழுப்பெரையும் சாணம் குவிக்குமிடமும் குடிதண்ணீர்க்காக உபயோகப்படும் கிணறுகளின் பக்கத்திலிருந்து வெகுதூரம் விலகி இருக்கவேண்டும்.

சிசு மரணம்

P. G. T

[முன் 49-ம் பக்கம் தொடர்ச்சி]

இனி நம் நாட்டில் இவ்வளவு அதிகமாக உண்டாகும் சிசு மரணங்களை குறைப்பதற்கு நாம் செய்துகொள்ளக்கூடிய வழிகள் என்னென்னவென்று பார்ப்போம்.

நமது நாட்டில் நாம் செய்துகொள்ளக்கூடிய வழிகளைப்பற்றி கூறுமுன்னர் அயல் நாடுகளில் கடந்த 20 வருஷங்களாக இது விஷயமாய் என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று சற்று

கவனிக்கவேண்டும். கிரேட் பிரிட்டன் (Great Britain) என்னும் ஆங்கில நாட்டில் இவ்விஷயத்தைக் குறித்து உண்டான லோகார்த்தக் கிளர்ச்சியினால், பிரசவப்பெண்களையும் சிசுமுதல் மேலான குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு வேண்டிய அனேக நியாய வழிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளில் முதலாவதானது "1902-ம் ஷூத்து மருத்துவச்சிகள் ஆக்ட்டு (Midwives Act). இந்த ஆக்டடின் நோக்கம் என்னவென்றால், மருத்துவத்தில் தேர்ச்சியடைந்த மருத்துவச்சிகளின் பெயர்களை பதிவுசெய்து கொள்ளவும், அப்படி பதிவு செய்யப்படாத மருத்துவச்சிகள் மருத்துவம் பார்க்கக்கூடா தென்பதுமே. அந்த ஆக்ட்டின் விதிகளுக்கு விரோதமாய் நடப்பவர்களுக்கு தண்டனை ஏற்பட்டிருக்கிறது. ஆக்டின்படி யோக்யதாபத்திரம் பெறாத மருத்துவச்சிகளைக்கொண்டு ஒருவரும் மருத்துவம் செய்துகொள்ளக்கூடாது. யோக்யதா பத்திரம் பெற்ற மருத்துவச்சிகளை மேல் விசாரணை செய்வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆக்ட்டு மூலமாய் "மருத்துவச்சிகள் போர்டு" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்போர்டில் மருத்துவச்சிகளுக்கு பரீக்ஷைகள் ஏற்படுத்தி பரீக்ஷையில் தேர்ந்தவர்களுக்கு யோக்யதா பத்திரம் அளிக்கப்படும். மருத்துவச்சிகள் தங்கள் வேலைகளில் தப்புத் தண்டாக்கள் செய்தால் அவர்களை தண்டிக்கவோ, வேலையை விட்டு நீக்கவோ இப்போர்டாருக்கு அதிகாரமுண்டு. மருத்துவச்சிகள் அனுசரிக்கவேண்டிய சட்டதிட்டங்களும் இதில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜெனன ஆக்ட் (Births Act) டைப்பற்றி அறிக்கை செய்தல் மற்றொரு வழி. இதோடு 'குழந்தைகள் ஆக்ட்டு' என்றும் 'அம்மைக்குத்து ஆக்ட்டு' என்றும் இதர இரண்டு ஆக்ட்டுகளும் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆக்ட்டுகளின் விதிகளை பலபல ஸ்தல அதிகாரிகளாலும் ஊர்ஜிதத்திற்கு கொண்டுவரப்பட்டதில் அவைகளின் பலன் ரொம்ப விசேஷித்த விதமாகவே யிருந்திருக்கிறது. உதாரணமாகப் ப்ராட் போர்ட் (Brad ford) என்னும் பட்டணத்தில் ஜனத்தொகை 2,88,456. இதில் 50 மருத்துவச்சிகள் நியமுகமாகியிருக்கிறார்கள். இவர்கள் பிறப்புகளில நூற்றுக்கு ஐம்பத்தைந்து வீதம் பேர்காலம் பார்த்து வந்திருக்கிறார்கள். இவர்களை மேல் விசாரணை செய்வதற்கு ஒரு அம்மாளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1916-ம் ஷூத்தில் 3851 சிசுக்களை 36,087 தடவல் போய் பார்த்திருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் போகும் காலம் வரும் வரையும் அவர்களைப் போய் பார்த்து வருகிறார்கள்.

ஷை பட்டணத்திலுள்ள நகர பரிபாலன அங்கத்தார் மூன்று இடங்களை நிர்மானித்திருக்கிறார்கள் அதாவது 1. பேர்கால ஆஸ்பத்திரியில் பேர்காலத்துக்கு முன் வரும் வியாதிகளை பார்ப்பதற்கான ஒரு இடமும் 2. சிசுக்கள் ஆஸ்பத்திரியில் சிசுக்களைப்பற்றி ஆலோசனை செய்வதற்கான ஓரிடமும் 3. ஒன்று முதல் ஐந்து வயசுள்ள குழந்தைகளுக்கு ஒரு ஆஸ்பத்திரியுமாக மூன்று. இவைகளில சிசுக்கள் ஆஸ்பத்திரியல்

மூன்று மெடிக்கல் ஆபிஸர்களும் 14 நர்ஸ்களும் 6 wார்க்குகளும் உண்டு. சிசுக்களை நிறுத்து, வைத்திய பரிசோதனை செய்து மருந்து கள் கொடுத்துவருகிறார்கள். மருந்துகளும், பாலும், மற்ற ஆகாரங்க ளும் இலவசமாயும் விலைக்கும் கிடைக்கும். துணிகள் விலைக்கு விற்கப் படும். தாய்மார்களுக்கு தங்களுடைய ஆரோக்கியத்தைப்பற்றியும் சொல்லி வைக்கப்படும். குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுப்பதைப் பற்றியும், உடை உடுத்தவேண்டியதைப்பற்றியும் கற்பிக்கப்படுகிறது.

கர்ப்பிணிகளை ஆரோக்கிய விசாரணைக்காரர் போய் பார்த்து அவர் களுக்கு ஆரோக்கிய சம்மந்தமான ஆலோசனைகள் சொல்லி அவசர மானல் மேல்சொன்ன 1-ம்சிர் ஆஸ்பத்திரியில் அவர்களை போகச் செய்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களுக்கு ஒழுங்கு செய்வார் கள்.

ஷை முனிசிப்பாலிட்டியிலிருந்து வியாதிக்காரர்களுக்கு சாப்பாடு தயார் செய்வதற்கு ஏழு இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏதா வது ஓர் இடத்தில் சாப்பாடு தயார் செய்து மேல்ச் சொன்ன மூன்று ஆஸ்பத்திரிகளுக்கும் கொண்டுபோய் கொடுக்கப்படுகிறது.

பேர்கால ஆஸ்பத்திரியில 20 படுக்கைகள் போடப்பட்டிருக்கிறது. சிசுக்கள் ஆஸ்பத்திரியில் ஒரு வார்டில் 20 கட்டில்கள் போடப்பட்டிருக் கிறது. சோகையுள்ள குழந்தைகளையும் கணை வியாதியுள்ள பிள்ளை களையும் இங்கு கொண்டுவந்து மருந்து கொடுத்து பார்த்து வருகிறார் கள். கண், காது, தொண்டை, மூக்கு முதலியவைகளில் ஏற்படும் பல வியாதிகளுக்கும் பிரத்தியேகமான ஒரு ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை நடத்தி வருகிறார்கள்.

(இன்னும் வரும்).

பெற்றோர் கடமை

(பல்லாவரம் பொதுநிலைக்கழகத்து நாகை நீலாம்பிகை அம்மை எழுதியது)

"ஈன்ற பொழுதிற் பெரிது வக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" திருக்குறள்.

தாயானவள் பிள்ளைக்குச் செய்யவேண்டிய கடமையானது மற்ற எல்லாக் கடமைகளிலும் சிறந்ததாக இருத்தலின், அதுபற்றிச் சிறிது ஆராய்வாம். மனைவி கணவனுக்குச் செய்யுங் கடமையிலும், மக்கள் பெற்றோர்க்குச் செய்யுங் கடமையிலும் உடன்பிறந்தார் உடன்பிறந் தார்க்குச் செய்யுங் கடமையிலும் நண்பர் நண்பருக்குச் செய்யுங் கட மையிலும், குடிகள் அரசருக்குச்செய்யுங் கடமையிலும், அரசர் குடிகளுக் குச்செய்யுங் கடமையிலும், தாயானவள் தன் பிள்ளைகட்குச் செய்யுங் கடமையே மேலானதாய் விளங்குகின்றது. ஏனென்றால்,

மனைவியாயும், கணவனாயும், உடன்பிறந்தோராயும், நண்பராயும், குடிகளாயும், அரசராயும் உள்ள எல்லாரும் முடிவாகத் தாயின் வயிற்றிற் பிறப்பவர்களே. ஆகையால், அவர்களெல்லாரும் தாயின் உதவியினாலேயே மேலான நிலைமைக்கு வரவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். குழந்தையாயிருந்த காலந்தொட்டே தாயானவள் தன் மக்களை எந்த வகையில் வளர்த்து வருகின்றாளோ அதற்கேற்றபடி அவர்கள் நல்லவராகவாவது, தீயவராகவாவது நடக்கின்றார்கள். தாயானவள் நல்லறிவும், நல்லியல்பும், நல்ல செய்கையும், உடையவளாயிருத்தலோடு, தன் மக்களும் தன்னைப்போலவே ஆகவேண்டுமென்னும் அக்கறையோடு அவர்களை வளர்த்து வருவாளாயின், அவர்கள் நல்லவராயே விளங்குவார். இவ்வாறின்றித் தாயானவள் தீயவளாயிருப்பாளாயின், அவளால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தீயவர்களாய் விடுவார்களென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? கொழுமையான நல்லநிலத்தில் முளைத்த பயிரையும், சாரமற்ற உவர் நிலத்தில் தோன்றிய புற்பூண்டுகளையும் ஒப்பிட்டுப்பாருங்கள்! நல்ல நிலத்தில் முளைத்த பயிர் எவ்வளவு செழுமையாய் வளர்ந்து, நெல், கேள்வரகு, சோளம் முதலான பொருள்களைத் தந்து எல்லாருக்கும் எவ்வளவு மிகுதியாய்ப் பயன் படுகின்றன! உவர் நிலத்திற்றோன்றிய புற்பூண்டுகளோ வற்றி வாண்டு விலங்கினங்களுக்கும் பயன்படாமற் போகின்றன. இதுபோலவே நல்ல தாயினிடத்திலும் தீயதாயினிடத்திலும் தோன்றிய பிள்ளைகளும் இருப்பார்களென்று நாம் அறிந்துகொள்ளல் வேண்டும்.

“தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்னும் பழமொழிப்படி நாம் சிறுபிள்ளைகளாயிருந்தபோது நம்மிடத்தில் உண்டான பழக்கம் நம்மறிவில் வேரூன்றிவிடுவதால் அது நாம் வளருந்தோறும் கூடவே வளர்ந்து நன்மையையாவது தீமையையாவது தருகின்றது. ஆதலாற் பெரியவர்களானபிறகும் எல்லார்க்கும் நல்லவர்களாய்ப் பயன்பட்டு வாழ்வதற்கு நாம் சிறுபொழுதில் கைக்கொண்ட பழக்கமே முதன்மையானதாயிருக்கின்றது. இனிச் சிறுபோதில் நமக்கு வரும் பழக்கம் எங்கேயிருந்து வருகின்றதென்பதைச் சிறிது நினைத்துப்பாருங்கள்! நாம் குழந்தையாயிருந்த காலத்தில் நம்மைப்பெற்ற தந்தையோடு நெருங்கிப் பழகினோமா? சிறிதும் இல்லையே. ஏனெனில், நம் தந்தையோ நம்மையும் நம் அன்னையையும், நம்மைச்சேர்ந்தவர்களையும் பாதுகாக்கும்பொருட்டுப் பகற்பொழுதெல்லாம் வெளியே சென்று உழைத்து வீட்டிற்கு வந்தால் அலுத்து இளைப்பாறப்போகின்றனர். நம்முடன் பிறந்தவரோ சிறியவராயிருந்தால் நமக்கு ஏதும் தெரிவிக்கமாட்டாதவராயிருத்தலின், அவரால் நாம் அடையும் பயனும் ஒன்றுமில்லை. அவர் பெரியவராயிருந்தாலோ கல்வி கற்கவும், பொருள் தேடவும், கணவனோடு வாழவும் வெளியே போய்விடுகின்றனர். ஆதலால் அவராலும் நாம் அடைவதொன்றுமில்லை. இனிச் சுற்றத்தாரும் இடைக்கிடையே

நம் வீட்டுக்கு வந்துபோகின்றவர்களேயல்லாமல் நிலையாக இருந்து நம்மோடு நெருங்கிப் பழகுகின்றவர்களல்லாமையால் அவர்களாலும நாம் பெறுவது ஒன்றுமில்லை. இவர்களெல்லாம் இங்ஙனமாகப், பின்னை யார்தாம் நம் சிறுபொழுதில் நம்மோடு உடன் பழகுவோரென்று ஆய்ந்து பார்த்தால் அவர் நம் தாயமாரே ஆவாரென்று உணரப்பெறுகின்றோம்.

நாம் ஏதும் அறியாச் சிறு குழவியாய் ; இருந்தபோது நம்மை சீராட்டிப்பாராட்டி வந்தவள் நம் அன்னையே அன்றோ? நாம் பசியால் வருந்தி வாய் திறந்து அழுதபோது நம் அருகே ஓடிவந்து நம்மை எடுத்து முத்தம் வைத்து உள்ளங்களிந்து பாலூட்டினவள் நம் அன்னையேயன்றி வேறு பிறர் உண்டா? நாம் சிறிது சிறிதாய் வளர்ந்து வரும்போது நமக்குவேண்டிய பால், சோறு முதலியவைகளை நமக்குச் சுட்டிச் சுட்டிக் காட்டி அவற்றின் பெயர்களை நமக்குக் கற்றுக்கொடுத்து வந்த முதல் ஆசிரியரும் நம் அருமை தாயே யன்றோ? இடைக்கிடையே நாம் நோயால் வருந்திக்கிடந்த காலங்களிலெல்லாம் அதற்குத் தானும உடன் வருந்திப் பகலென்றும இராவென்றும் பாராது நம் அருகிருந்து நம் நோய் தீரும்பொருட்டு வேண்டும் உதவிகளை யெல்லாம் கைம்மாறு கருதாது செய்துவந்த நம் அருட்களஞ்சியமபோல்வாளும் நம் அன்னையேயன்றோ? இங்ஙனமெல்லாம் நம் உயிரோடும், நம் உடம்போடும், நம் நினைவோடும், நம் சொல்லோடும், நம்செயலோடும் உடன் கலந்து உடன் பழகிவரும் தெய்வம்போல்வாள் நம் அன்னையாகவே இருத்தலின், அவர்களாலேதாம் நாம் சீர்திருந்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு நம்மை முழுதும் சீர்திருத்தவேண்டிய நிலைமையிலுள்ள நம் அன்னையானவள் தன் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை முற்றும் அறிந்தவர்களாக இருக்கவேண்டுமன்றோ? அறிவில்லாத தாய் தன் மக்களை எப்படி அறிவுடையராக்குதல் கூடும்? விளக்கில்லாத இடத்தில் வெளிச்சம் உண்டாகுமா? பூவில்லாத இடத்தில் மணம் உண்டாகுமா? ஆதலால், தாயானவள், மிகுந்த அறிவுடையவளாய் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். இனித் தாய் மார்க்கு அறிவு தான் எப்படி வரக்கூடுமென்று எண்ணிப் பார்ப்போமாயின் கற்றோர் சொல்லும் அரிய பொருள்களை அடுத்தடுத்துக் கேட்பதனாலும் அவர் எழுதிய நூல்களை இடைவிடாது கற்று உணர்வதனாலுமே அறிவுடையராகக் கூடுமென்பது தெளிவாக விளங்கும். கல்வியறிவிலும், உயர்ந்த எண்ணங்களிலுமே எந்நேரமும் பழகின ஒருதாய்க்கு நல்ல பிள்ளைகளே பிறக்கக்கூடுமல்லாமல், தீய பிள்ளைகள் பிறப்பதற்குச் சிறிதும் இடமேயில்லை. நாம் எவ்வகையான நினைவில் ஓயாமல் பழகிவருகின்றோமோ அதற்குத்தக்கபடி நம்முடம்பிலும், செய்கையிலும், பலவகையான அடையாளங்கள் காணப்படுகின்றன. வெடுவெடுப்பாகப் பேசும் ஒருவர் முகத்தையும், மிகவும் அமைதியாகப் பேசும் மற்றொருவர் முகத்தையும் பாருங்கள்! சிற்றம் உள்ளவர் முகம் பார்ப்பவர்க்கு

எவ்வளவு அச்சத்தைத் தருகின்றது, அமைதியுள்ளவர் முகமோ எவ்வளவு கிளர்ச்சியைத் தருகின்றது! உயர்ந்த அறிவுடையவர் செய்கை எல்லார்க்கும் இன்பத்தைத் தருதலும், அறிவில்லாதவர் செய்கை துன்பத்தைத் தருதலும் நாம் வழக்கமாக அறிந்திருக்கின்றனமே தாய்மார்களே! இப்படியாக நம் அறிவுக்கும் நினைவுக்கும் ஏற்றபடி நம் உடம்பும் செய்கையும் மாறுபடுவதைக் காணுங்கால் நாம் எவ்வளவு அமைதியும் அறிவும் உடையவர்களாக இருக்கவேண்டுமென்பது உங்களுக்கு விளங்காமற் போகாது. நாம் அழகுடையவர்களாயிருக்க வேண்டுமென்றும், நாம் நல்லபிள்ளைகளைப் பெறவேண்டுமென்றும் அளவிறந்த ஆவல் உடையவர்களாயிருக்கின்றோம்; ஆனால், அப்படியே பெறுவதற்கு முன்னதாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைக்கின்றோமா? சிறிதும் இல்லையே. பசி யெடுத்தபோது நல்ல உணவு வேண்டுமெனறு விரும்புகின்றவர்கள் பசி எடுக்குமுன்னமே அவ்வுணவைச் சமைத்துக் கொள்ளல் வேண்டுமன்றோ? மழை பெய்தாற் பயிர் செய்து பிழைக்கவேண்டுபவர்கள் மழைவருவதற்கு முந்தியே நிலத்தைத் திருத்திப் பதப்படுத்த வேண்டாமா? அழகான அறிவும் அழகான தன்மையும் இல்லாதவர்க்கு அழகு எங்கிருந்து வந்துவிடும்? நல்லவரல்லாதவரும் அழகுடையவராயிருக்கக் காண்கின்றோமோ யென்றால், அவர்க்கு உள்ள வெளியழகு முதலில் பார்ப்பவர்க்குச் சிறிது கவற்சியை உண்டுபண்ணுமேனும், பிறகு அவரோடு கலந்து பழகுவார்க்கு அவரிடத்திலுள்ள தீயதன்மை அருவருப்பை விளைவிக்குமாதலால் அது சிறிதும் அழகாகமாட்டாது. எட்டிப்பழம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருந்தாலும், அதனைச் சிறிது நாவிலிட்டால் அஃது எவ்வளவு அருவருப்பைத் தருகின்றது. இதனைக்கொண்டு, பார்ப்பதற்கும் பழகுவதற்கும இனிய அறிவும் இயற்கையும் உடையவர்களே உண்மையான அழகு உள்ளவர்களென்று அறிந்துகொள்ளுங்கள்! நம் பெண்பாலரில் எத்தனையோ பெயர் அருவருக்கத்தக்க அறியாமையும் தீய தன்மையும், தீயசெய்கையும் உடையவராயிருந்தும், இவற்றைத் திருத்திக்கொள்ளச் சிறிதேனும் முயற்சி செய்யாமல் உயர்ந்த ஆடை அணிகலன்கள் அணிவதில் மட்டும் மிகுந்த கருத்துடையவராயிருக்கின்றார்கள். இதனால் நம்மவர்க்கு ஆடை அணிகலன்கள் முற்றிலும் வேண்டாமென்று யான் கூற முனவரவில்லை. அவரவர் தகுதிக்கும், நிலைமைக்கும் பொருத்தமானபடி ஆடை அணிகலன்கள் வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை. என்றாலும், வெளியேயுள்ள உடம்பை அழகு செய்வது இரண்டாந்தரமாகவும், உள்ளேயுள்ள நம் அறிவையும் நினைவையும் அழகு செய்வது முதற்றரமாகவும நாம் கைக்கொள்ள வேண்டும். ஒரு வீட்டின் முன்வாயிலை கூட்டி மெழுகிக் கோலமிட்டுப் பூச்சாத்தி விளக்கிட்டு அழகுபடுத்துவது போலவே, அவ்வீட்டின் உள்ளேயும் அங்ஙனமே துப்புரவு செய்து வைக்கவேண்டாமா? முன் வாயில் மட்டும் அழகாயிருக்கும்படி ஒப்பனைசெய்து வைத்துவிட்டு

உள்ளே சென்று பார்த்தால் குப்பையும் கூளமும் முடைநாற்றமும் இருளும் மலிந்து கிடக்க விட்டிருப்பது எவ்வளவு அருவருப்பை உண்டாக்குவதாகும்! இதுபோலவே, நாம் நமதுடமபை எவ்வளவுதான் ஒப்பனை செய்து அழகு படுத்தினலும், நமது உள்ளத்தையும் அங்ஙனமே அறிவினுலும் நல்லொழுக்கத்தினுலும் விளங்கச் செய்யாவிட்டால் அது சிறிதாயினும் பயன்படமாட்டாது. நாம் பெறும் பிள்ளைகளும் உயர்ந்தவராகமாட்டார்கள். (தொடரும்).

ஓர் பெண்மணியின் கடிதம்

"ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" என்ற திங்கள் பத்திரத்தின் முதல் இதழ் கண்டு மன மகிழ்ந்தேன்.

அறியாமை யென்னும் அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்கட்கு இப்பத்திரிகை ஓர் தீபம் போல் விளங்குமென்பதற்கு ஐயமில்லை. தற்காலம் தமிழ்ப் பத்திரிகைகள் நூற்றுக் கணக்காகத் தோன்றுகின்றன ஆயினும் பெண்பாலார்க்கு இப்பத்திரிகையைப் போல உபயோகமுள்ள இன்னொன்றுண்டென்று நான் நம்பவில்லை. இலங்கையில் சிசு மரணம் மிகவும் பயங்கரமாக விருக்கின்றது. சென்ற சனத்தொகைக் கணக்கின்படி பிறக்கும் 1000 குழந்தைகளில் 420 இறந்து விடுகின்றன. இத்துடன் மற்ற நாடுகளை ஒத்து நோக்கும் பொழுது இவ்வளவு பயங்கரமான நிலை இன்னொரு ஊரிலும் காணப்படவில்லை. உதாரணமாக 1920ஞு பல நாடுகளிலும் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் பின் காணும் வீதப்படி இறந்தன.

ஆஸ்ற்றேலியா	165
நியூசிலண்ட்	175
இங்கிலண்டு	225
சிங்கப்பூர்	300
ஜமைக்கா	400
இலங்கை	420

இந்தியாவின் நிலை இப் பத்திரிகையின் முதலிதழ் 17ம் பக்கத்திலுள்ள "குழந்தையின் சாவு" என்ற வியாசத்தை வாசித்தாலறியலாம்.

இவ்வுண்மையை அறிந்த தமிழ்த் தாய் இந நாட்டில் ஐந்து பேர் தானுமுண்டென்ற நான் நம்பவில்லை. இவ்விதம் பயங்கரமான ரீதியில் சிசுக்கள் இறப்பதன் காரணம் யாது? அதை மாற்றுவதெவ்விதம்? சிசு மரணத்தின் முக்கிய காரணம் தாய்மார்களின் மடமையேயாம். மேலைத் தேசங்களில "குழந்தை" என்று எண்ணும் 15 16, வயதில் நமது பெண்கள் தாய்மாராய் விடுகின்றூர்கள்! இவ் வயதிற்குள் இவர்கட்கு உண்டாகக்கூடிய அறிவு எவ்வளவு?

இப் பெண்களில் எழுபத்தைந்து சதமேனி எழுத வாசிக்கத் தெரியாத 'முகத்திரண்டு புண்ணுடையோ'' ராயே காணப்படுகின்றார்கள். எஞ்சிய இருபத்தைம்மரில் இருபது பேரும் அ, ஆ என்று வாசிக்கக் கூடியவர்களே ஒழிய கல்வியின் பயனைப் பெற்றவர்களாய்க் காணப்படவில்லை. மற்ற ஐவரில் நாலு பேரும் ஏதோ சிறிது படித்து அவ்வற்பப் படிப் பால் அகங்காரம், மமதை முதலியவைகளைக் கொண்டு நிற்கின்றார். இதன்பின் பிறக்கும் குழந்தைகள் இறப்பது அதிசயமா? இவ்வாயுளுள் கிடைக்கக்கூடிய பேறுள் மேலான பேறு மக்கட் பேறன்றோ? அவ் விதம் கிடைப்பனவற்றை நமது அறியாமையினுல் இழப்பதென்றால் எவ்வளவு துக்ககரமான காரியம். தாய்மார்கள் அறிவாளிகளாயிருந்தால் மட்டுமே சிசுமரணத்தைக் குறைக்கலாம். அல்லாது'' விதியில்'' நம்பிக் கொண்டிருந்தால் இக்கொடிய சம்பவம் அதிகரித்துக்கொண்டே வரும். ஆதலால் நாம் முதலாவதாகச் செய்ய வேண்டியது பிற்காலத்துத் தாய் மார்களாய் வரப்போகும் பெண் குழந்தைகட்கு அப்பதவியைச் செவ்வனே வகிப்பதற்காக வேண்டிய அறிவு முழுவதையும் ஊட்டி வைப்பதேயாம். பத்திராதிபரம்மாள் தமது தலையங்கத்திற் கூறியவண்ணம் தமது குழந்தை மரணம் தருவாயிலிருந்தபோதும் சோதிடனிடம்கேட்டு மருந்தொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் மூடத் தாய்மார் எமது நாட்டிலதிகமுண்டு. இக்குறைகளையெல்லாம் நீக்கிப் பெற்றோரும் பிள்ளைகளும் சுகவாழ்வடைவதற்கான வழிகளை எடுத்துக் காட்டி அறியாமை என்னும் இருள் அடைந்திருக்கும் எமது வீடுகட்கு ஓர் தீபம் போல் டக்டர் அனுதாமஸ் அம்மாளின் பத்திரம் விளங்குவதற்கு ஈசன் அருள் புரிவார் என்னும் நம்பிக்கையுடன் இக் கடிதத்தை முடிக்கின்றேன்.

இங்ஙனம்

யாழ்ப்பாணம்
15—5—23

மா. மங்களம்மாள்
(Mrs. T. P. MASILAMANY)

மதிப்புரைகள்

''தேசாபிமானி'' இது இலங்கைத்தீவில் யாழ்ப்பாணமென்னும் ஊரில், வாரம் இருமுறை பிரசுரமாகி வருகிறது. 'தேசாபிமான'மென்பதை சொப்பனத்திலும் நினைவுகொள்ளா பாமர ஜனங்களுக்கும் தேசாபிமானத்தை தெள்ளிதிற் புகட்டக்கூடியதோடுகூட விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலிய சகல விஷயங்களும் அடங்கியுள்ளது. சகலருக்கும் பிரயோஜனமான பத்திரிகை யென்பதிற் சந்தேகமேயில்லை. பத்திர ப்ரவர்த்தன விஷயத்தில் சுமார் 20 வருடகாலமாக நன்குமுயற்சி செய்து அனுபவம் நிறைந்திருக்கும் ஸ்ரீமான் T. P. மாசிலாமணிபிள்ளை அவர்கள்தான் இதன் பத்திராதிபர். வருட சந்தா ரூ 6—0—0

தேசாபிமானி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

"பாண்டிய நேசன்" மதுரைமாநகரில் ஒவ்வொரு வாரமும் பிரதி சனிக்கிழமை வெளிவரும் ஓர் ஆங்கில தமிழ்ப்பத்திரிகை. நகரச்செய்திகளும் இராஜதானிச் செய்திகளும் அயல் நாட்டுச் செய்திகளும் ஒருங்கே எளிய நடையில் யாவரும் வாசித்தறியும் வண்ணம் எழுதப்பட்டுளது. மதுரைப் பட்டணத்து மானிடருக்கும் மற்றும் நம் தேயத்தவருக்கும் மிகவும் இன்றியமையாதது.

பத்திராதிபர்: மிஸ்ட்டர் P. ஜார்ஜ்.

சந்தா விபரம் உள்ளூர் ஒரு வருஷத்திற்கு ரூ 5—0—0 ஆறுமாசத்திற்கு ரூ 3—0—0

வெளியூர் ஷை 6—0—0 ஷை 3—8—0

"எலிமெண்டரி பாடசாலைக்கும், பெண்பாலர்க்கும், மாணவர்க்கும் வருஷத்திற்கு ரூ 4—0—0.

விலாசம். 42, மேல கேட், மதுரை.

"தமிழர் போதினி" நமது தமிழ் நாட்டாருக்கு அரும் பெரும் போதனைகள் நிறைந்த ஓர் திங்கள்ப் பத்திரிகை. சாதாரண ஜனங்களுக்கு இராஜீய தேசிய விஷயங்களை எளிதிற் புலப்படுத்தக்கூடியதும் தேசாபிமானமற்றவர்கட்கும், சமூகத்தில் தேசாபிமானத்தை ஊட்டச் செய்வதுமானது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சஞ்சீவி போன்றது.

வருட சந்தா ரூ 3—0—0

பத்திராதிபர். து. விஜயரத்தினம்,

விலாசம்: பத்திராதிபர், "தமிழர் போதினி"

(P. O). வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

"விஸ்வகர்மன்—தொழில்" இது விஸ்வகர்ம குலஜன மேம்பாட்டிற்கு உழைக்கும் வாரப் பத்திரிகை. இதில் நாட்டு நகரச்செய்தி, வர்த்தகக் குறிப்புகள், அரசியல், தொழில்முறை, கூட்டுறவு, பொருளாதாரம், சுகாதாரம், ஆசார சீர்திருத்தம் முதலிய விஸ்வகர்ம சமுதாயத்திற்கு உபயோகமான பல பொது விஷயங்கள் வரையப்பட்டுளது. இது பத்து வருஷ காலமாய் நன்கு ஆதரிக்கப்பட்டு வளர்ந்தோங்கி வருகிறது.

சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு { வருஷ சந்தா ரூ 4—0—0 / ஆறுமாத சந்தா ரூ 2—0—0 } வெளிநாட்டுக்கு ரூ 6—0—0

பத்திராதிபர், மங்கலம்—தியாகசுந்தர வேதாச்சல ஆச்சாரி B. A.,

விலாசம். 5/10 வேதகிரி மேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

AS OTHERS SEE US

'*JUSTICE*',

Madras, 18th May, 1923.

HEALTH AND INFANT WELFARE

This is the title of an Anglo-Tamil monthly magazine published by Dr. Mrs. Anna Thomas of Tinnevelly. We have received the first number and feel glad that health and welfare are being increasingly recognised as a serious problem in our country. Lady Willingdon, whose interest in this movement is now a household theme, has given an appreciation of Mrs. Thomas's work, and a halftone block of Lady Willingdon's photo accompanies it. Written in easy, plain Tamil the magazine ought to be welcome in every S. Indian home The subscription is Rs. 3 per annum.

'*SRIRAMAKRISHNA VIJAYAM*'

Madras

HEALTH AND INFANT WELFARE: A monthly Anglo-Tamil Journal edited by Dr. Mrs. Anna Thomas. Annual subscription Rupees Three.

This magazine supplies a real want. Infant mortality and deaths resulting from infectious diseases are higher in India than in any other country. The dissemination of knowledge on hygiene and sanitation and on the prevention and cure of infantile diseases is of great national benefit. We wish the new journal the success which it richly deserves. Intending subscribers should apply to the Manager, 'Health and Infant Welfare, Tinnevelly Town'

'*DAILY EXPRESS*',

Madras, 12th May, 1923.

"HEALTH AND INFANT WELFARE" —

We welcome this new Anglo-Tamil monthly, edited by Dr. Mrs. Anna Thomas of Tinnevelly. It is needless to emphasise at this hour of the day on the importance of child welfare and the necessity to equip the would be mothers with a thorough knowledge of child birth and how children ought to be brought up. The increased and appalling rate of mortality in this Presidency may be traced to the ignorance and illiteracy of young mother, who, as the editor of the magazine before us observes, are so steeped in superstition that they would rather let a child die than give it medicine on what, according to them, is an inauspicious day. If child welfare is to progress on right lines, the mother should be educated first and we believe that this new monthly attempts to achieve this laud-

able task. The issue before us contains a good many useful and suggestive articles and we hope that the public would widely patronise this journal.

'THE CHRISTIAN PATRIOT',

Madras, 12th May, 1923.

HEALTH AND INFANT WELFARE

It goes without saying that the women of an older generation, not initiated into the mysteries of modern civilization, are better qualified to take care of children than our sisters of to-day with their book-taught learning. The former have gone through the School of Common Sense and experience, and have stored up in their memories a few lessons of great value for the nurture of infants; but the latter are exposed to the vagaries of a trained mind working in a vacuum. To those who have almost forgotten that there are such things as Babies, 'HEALTH AND INFANT WELFARE' an Anglo-Tamil monthly edited by Dr. Mrs. Anna Thomas, Tinnevelly, ought to provide ample instruction, out of the abundence of experience as a medical practitioner she writes; and we recommend it to all who are interested in this important department of young life.

'THE HEALTH',

Madras, May, 1923.

HEALTH AND INFANT WELFARE—An Anglo-Tamil monthly Edited by Dr. (Mrs.) Anna Thomas Price 6 as. per single copy and Rs. 3 per annum

The April and May issues of this new journal started and edited by Dr. (Mrs.) Anna Thomas of Tinnevelly contains very useful information. The first few articles are in English while the rest in Tamil. As one whose chief aim is to bring home to the minds of people the importance and necessity of Health Maternity and Child Welfare, this new journal is a welcome addition to our ranks. We wish the enterprise every success.

'THE HINDU',

Madras, 18th May, 1923.

HEALTH AND INFANT WELFARE—This is an Anglo-Tamil monthly issued from Tinnevelly under the Editorship of Dr. Anna Thomas. Its object is seen in the name of the journal and the first issue before us contains instructive articles on 'mental Deficiency in Children' and the care of infants etc The annual subscription is Rs. 3.

'MORNING STAR',

Jaffna, May 12, 23.

HEALTH AND INFANT WELFARE—We are in receipt of an Anglo-Tamil monthly health journal entitled 'Health and Infant Welfare' which is to be published in Tinnevelly in the Madras Presidency under the

distinguished auspices of Her Excellency Lady Willingdon and the editorship of Dr. Mrs. Anna Thomas a popular and successful medical practitioner, from the middle of this month. Her Excellency whose interest in health and welfare movement is so well-known has sent the editor her photograph and an autograph letter to be published in the journal. From the varied personal experience of Indian home life of the enthusiastic Editor the journal is to be of real use to all Tamil and English speaking homes, This is the first attempt of the kind by an Indian lady. From the first number sent to us we have no hesitation in saying that it is remarkably well edited, and will prove a boon to Indian and Ceylonese homes.

THE JUNGLE WALLAH

AN ANGLO-TAMIL WEEKLY

EDITED BY

Mr. C. D PARTHASARATHY,

late of Madras Forest.

RATES OF SUBSCRIPTION

India, Burmah, & Ceylon

Yearly	...	Rs. 12/-
Half yearly	...	„ 6/-
Quarterly	...	„ 3/-
Monthly	...	„ 1/4.

Apply to:—

Manager,
JUNGLE WALLAH,
Devieot House,
Vepery Madras.

எங்களது பத்திரிகையைப்பற்றி பிறர் கூறும் மதிப்புரை

தேசாபிமானி

யாழ்பாணம் மே மீ 8௳

‘ஆரோக்கியமும், சிசுவின்சுகவாழ்வும்’ இப்பெரியமாசிக பத்திரமென்று (monthly magazine) சென்ற ஏப்ரல் மாசம் தொடக்கி வெளிவருகின்றது. இதன்கண் ஆண் பெண்ணிருபாலார்க்கும் பொதுவான ஆரோக்கிய விஷயங்களும் சிசுபரிபாலன முறைகளும் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. முதலாம் இலக்கத்தில், பெற்றோர்கள் தெரியவேண்டுவது, தாயதுவேலை, பிள்ளை பாதுகாக்கும் முறை, சிசுமரணம், ஜலதோஷம், கர்ப்பிணிகளையும் சிசுக்களையும் ஆதரித்தல் முதலிய அரும்பெரும் விஷயங்கள் தமிழிலும் வேறிரு விஷயங்கள் ஆங்கிலத்திலும வெளிவந்துள்ளன, பத்திரிகையைப் பெண்கள் அனைவரும் வாங்கிப்படிப்பதனால, கர்ப்ப காலத்திலும், பிறசமையங்களிலும் சம்பவிக்கும் நோய்களுக்குத் தப்புவதும், சிசுக்களை ஆரோக்கியமாக வளர்ப்பதும் சுலபமாகும். இப்பத்திரிகையின் ஆசிரியர் டாக்டர் அன்னா தாமஸ் அம்மாள். இதன் வருஷசந்தா ரூபா-3 பத்திரிகை வாங்குமிடம் திருநெல்வேலி டவுன், இர்தியா.

'சுதேசமித்திரன்'

சென்னை மே௴ 1௳ 23.

ஆரோக்கியமும் சிசுவின் சுக வாழ்வும்.

சில காலமாக சிசு மரணம் அதிகரிப்பதைக் கண்ட அதிகாரிகள் தங்களால் கூடிய வரை சிசுக்களின் மரணம் அதிகப்படுவதைத் தடுக்க வழிகள் பல தேடி வருகின்றனர். அதற்கு உதவியாக டாக்டர் அன்னா தாமஸ் அம்மாள் "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" என்ற பெயருடன் ஒரு ஆங்கில தமிழ் மாதப் பத்திரிகை வெளியிடவாரம்பித்திருக்கின்றார். முதற் பிரதி நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதில் "குழந்தை பாதுகாக்கும் முறை", "தாயது வேலை", "ஜல தோஷம்", "கர்ப்பிணிகளையும் சிசுக்களையும் ஆதரித்தல்" முதலிய தலைப்புகளுடன் வியாசங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் மட்டுமே தெரிந்தோருக்கும் தமிழ் மட்டும் பயின்றோருக்கும் ஒருங்கே பயன்படும்படி இச்சஞ்சிகை ஆங்கில தமிழ் சஞ்சிகையாகப் பிரசுரிக்கப்படுகின்றது, இதன் வருஷ சந்தா மூன்றுரூபாய் தனிப் பிரதி ஆறு அணா.

"பொதுநலம்"

திருவனந்தபுரம் 4௳ மே௴ 1923.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும் இப்பெயர் பூண்ட ஒரு ஆங்கிலத் தமிழ் மாதப் பத்திரிகை வரப்பெற்றோம், அதன்கண் பெற்றோர்கள் தெரிய வேண்டுவது, குறிப்புகள், தாயது வேலை, பிள்ளையைப் பாதுகாக்கும் முறை, குழந்தைச்சாவு, ஜல தோஷம், தண்ணீரும் தேக ஆரோக்கியமும், கர்ப்பிணிகளையும் சிசுக்களையும் ஆதரித்தல் ஆகிய அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. தமிழ் நாட்டுப் பெண்கள் இதை அவசியம் படிக்கவேண்டும். பெண்கள் கல்விச் சாலைகளிலும் இதிலிருந்து சில விஷயங்களைப் படிப்பிக்கலாம். வருடச் சந்தா ரூபா மூன்று. முன் திருவிதாங்கூர் வைத்திய இலாகாவில் இருந்தவரும் இப்பொழுது பாளையங்கோட்டையில் நல்ல வைத்தியஞ்செய்து பெரும் பேர் பெற்றிருப்பவருமான டாக்டர் அன்னா தாமஸ் அம்மாளின் முயற்சி நன்குமுயற்சி ஆகுக. தமிழ் மாதர்களின் அறியாமையை நீக்குவதற்கு இது ஓர் நல்ல கருவியாகும்.

'தேசாபிமானி'

யாழ்ப்பாணம், மே௴ 2௳ 23

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.

டாக்டர் அன்னா தாமஸ் அம்மாளால் திருநெல்வேலியிலிருந்து பிரசுரிக்கப்படும் இம்மாதாந்தப் பத்திரிகையின் இரண்டாவது இலக்கம் வரப்பெற்றோம். முதல் இலக்கத்திலும் இது அதிக திருத்தமடைந்திருப்பதைக் கண்டு மிகவும் மனமகிழ்கின்றோம். இவ்வித மாதாந்தப் பத்திரிகைகளின் உபயோகம் இவ்வளவென்று கணக்கிடுவது முடியாது. தற்காலத்தில் நமக்கு முக்கியமாக வேண்டுவது இவ்விதப் பத்திரிகைகளே. சுவர் இருந்தால்தான் சித்திரமெழுதலாம். அவ்விதமே நாம் சுகமாய் வாழ்ந்தால் மட்டுமே மற்றெதுவும் செய்துமுடிக்க இயலும். ஆயினும் சுகமாய் வாழ்வதெவ்விதமென்பதறியாதாரே எம்முள்ப் பெரும்பான்மையோரும் அதை அறிவதற்கு ஆவலுடையவர்களாயும் காணப்படவில்லை. இதுபோலவே சிசு மரணமும் வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதையும் எவ்வளவோ குறைக்கலாம். ஆயினும் மடமையிலிருந்து மாறமாட்டோமென்று பிடிவாதமாய் நிற்கின்றோம். இக்குறைகளையெல்லாம் பரோபகாரம் ஒன்றைமட்டுமே உத்தேசித்து மாதுசிரோமணி அன்னா தோமாஸ் அம்மாள் ஆரம்பித்திருக்கும் பத்திரிகையானது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தமிழர்களாகிய எங்கள் ஒவ்வொருவருடையவும் வீட்டிற்கு ஓர்

தீபம்போல் விளங்கி அறியாமை என்னும் இருளை அகற்றுமென்பதில் எமக்குச் சந்தேகம் சிறிதேனுமில்லை. இதற்குக் கைமாறு தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகைக்கு முன்னதாகச் சந்தாவை அனுப்பி பத்திரிகையை வாங்கி வாசித்து அதில் கூறியிருக்கும் அரிய பெரிய விஷயங்களை உற்றுணர்ந்து அதன் வழி நடப்பதேயாம்.

உதய தாரகை,

யாழ்ப்பாணம் மே௴ 17உ: 23

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இது ஓர் ஆங்கில தமிழ் மாதப் பத்திரிகை சென்னைத் துரைத்தனத்தைச் சேர்ந்த திண்ணைவேலி டக்டர். அன்னு தோமஸ் அவர்களாற் பிரசுரிக்கப்படுவது. பிள்ளைகளின் சுகத்தைப் பாதுகாத்து, அவர்களது ஸ்திதி சகல விருத்திக்கு முரியதாய்ப் பிரகாசிக்கப்பண்ணுவதே நோக்கமாம். இதற்குரிய அறிவை மாதாமாக்குப் புகட்டும் விஷயங்களைப் பத்திராதிபர் ஆராய்ந்து வெளியிட நிச்சயித்திருக்கின்றார். பிள்ளைப்பேற்றிற் பெண்கள் அனுசரிக்க வேண்டிய சிகிச்சை முறைகளும் பிறவும் அவர்களுக்குத் தாராளமாய் எடுத்துக் காட்டப்படும். சென்னைத் தேசாதிபதியின் பாரியாராகும் வில்லிங்தன் அம்மாளவர்களே இந்த முயற்சியை விசேஷ சகாயத்தினாற் றூண்டி நடத்துகின்றனராதலின், அவரது படம் பத்திரிகையின் முற்பக்கத்திற் பதிக்கப் பெற்றிருக்கின்றது.

கிராம பரிபாலனம்.

திருநெல்வேலி மே௴ 15—5—23.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும். இத்தலைப் பெயர்கொண்ட ஆங்கிலத் தமிழ்மாதப் பத்திரிகையில் முதல் இலக்கம் வரப்பெற்றோம், இதில் வைத்திய சிரோன்மணியான அன்னு தாமஸ் அம்மை அவர்களால் மாதம் ஒருமுறை வெளியிடப்படுவதும, 'நோயற்ற வாழ்வே வாழ்வு' என்னும் உண்மையை நம்மவர்கள் இப்பொழுது மறந்துவருகிறார்கள். அறிந்தோ அறியாமலோ நம்மில் பலர் ஆரோக்கிய விதிகளையும் சுகவாழ்விற்குரிய இயற்கை விதிகளையும் மீறி நோய்வாய்ப்பட்டு தமது உற்றார் உறவினர்களுக்கும் வீண் சொமையாகிவிடுகிறார்கள். ஆதலால் இத்தகைய பத்திரிகை தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உலாவ வேண்டியது அவசியம். இதன் ஆண்டு கையொப்பத் தொகை ரூபாய் மூன்றே. வேண்டுவோர் நிர்வாகத் தலைவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

தச்சணமித்திரன்

மதுரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—என்று மகுடம் புனைந்து நாளிது 1923-௵ எப்பிரல்௴ முதற்கொண்டு ஒரு ஆங்கிலத் தமிழ் மாதப் பத்திரிகை வெளிவரப்பெற்றோம். அதை டாக்டர் அன்னுதாமஸ் அம்மாள் பத்திராதிபராயிருந்து இயற்றி வருகிறார். முதல் சஞ்சிகையானது முக்கியமான வியாசங்களைக் கொண்டுள்ளது. 5 பக்கங்கள் ஆங்கிலத்திலும் 6 முதல் 24 வரைப் பக்கங்கள் தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் குழந்தைகளில் மூளைக்குறை என்ற வியாசத்தின் முதற்பாகம் வெளிவந்துள்ளது. அது டாக்டர் டிரேட்தோலடு என்ற ஒருவரால் எழுதப் பெற்றது. குழந்தைகளைப் பாதுகாக்கும் முறையைப் பற்றியும் குழந்தைகளின் சாவைப்பற்றியும், ஜலதோஷத்தைப்பற்றியம் தமிழில் சிறு வியாசங்கள் வந்துள்ளன. தண்ணீரும் தேக

ஆரோக்கியமும் என்ற விஷயத்தைப் பற்றி ராவ்சாகேப் யு ராமராவ் எழுதுகிறார். பிரசவப் பெண்களையும் சிசுக்களையும் கவனிக்கும் முறையைப் பற்றிப் பத்திராதிபர் எழுதியிருப்பதை யாவரும் படித்தறிய வேண்டும்.

பத்திரிகையின் சந்தா வருடம் 1-க்கு ரூ 3. இதில் பல அச்சுப் பிழைகள் தென்படுகின்றன. லேடி உவில்லிங்டனுடைய படம் முதற்பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் டாக்டர் அன்னாதாமஸால் பிரசுரம் செய்யப்படுகிறது.

பாண்டிய நேசன்

மதுரா 12உ மேமீ 1923.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இவ்வழகிய பெயருடனமைந்த ஆங்கிலத் தமிழ் மாதப் பத்திரிகை ருத்ரோத்காரி௵ சித்திரைமீ முதல் திருநெல்வேலியினின்றும் வெளியிடப் பெறுகிறது. இதனை வெளியிட முற்பட்டுள்ளவர் பெண்கள் வைத்தியத்திலும் குழந்தைகளின் வைத்தியத்திலும் சிறந்த அனுபவமுற்ற டாக்டர் அன்னாதாமஸ் அம்மாள். இவர் வைத்திய முறையில் தேர்ந்து வைத்தியஞ் செய்த காலத்தில் தமது அனுபவத்திற்றோன்றிய வைத்தியக் குறிப்புகளை பிரசவப் பெண்களையும் சிசுக்களையும் பாதுகாக்கு முறை என்ற சிறு தமிழ்த் தனிப்புத்தகம் வாயிலாக இவ்வருடம் ஜனவரி மாதத்தில் வெளியிட்டுத் தமிழ் நாட்டிலுள்ள பெற்றோர்களையும் வைத்தியப் பற்றறிஞர்களையும் மகிழ்வித்தனர். அப்புத்தகத்தில் ஓர் பெண் கருப்பமுற்ற கால முதல் பிரசவித்துக் குழந்தையைக் குற்றமறப் பாதுகாத்துப் பிள்ளையாகக் காணுமவரை கவனித்தனுஷ்டிக்க வேண்டிய முறைகள் எளிய தமிழ் நடையில் விளங்க எழுதப்பட்டிருந்தமை எல்லாராலும் பாராட்டப்படுவதாயிற்று.

அறிஞரால் பாராட்ட பெறுதலான புத்தக வெளியீடு இம்மருத்துவத் தாயை மக்களின் நோயுற்ற வாழ்வுக்குக் காரணமான விஷயங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் மருத்துவ நிபுணர்களையும் மற்ற புலவர்களையுங்கொண்டு எழுதுவித்து மாதமொருமுறை பத்திரிகையாகப் புத்தக ரூபத்தில் வெளியிடத் தூண்டியது தமிழ் மக்கள் செய்த நற்றவமென்றே நம்புகின்றோம். மலையாளத்திற் பிறந்து வளர்ந்து தமிழ் மாகாணத்தில் மருத்துவத் தொழில் புரிந்துவரும் இப்பெண்மணி தாம் பழகுமிடங்களிலுள்ள தாய்மார்கள் தங்களையும் தங்களுக்குப் பிறக்குங் குழந்தைகளையும் பேணி வளர்க்கு முறையையும் தம்மைக்கொண்டவரைப் பேணி உபசரிக்கு முறையையும் உணராது வாளா பல இன்னல்களுக்கு உட்பட்டுத் துன்பப்படுவதை நீக்கி இன்பம் பெருக்க விழைந்து இவ்வரிய பத்திரிகை ராயல் 1-க்கு 8-ல் உயரிய தாளில் 3 பாரத்தில் நல்ல அச்சில் வெளிப்படுத்திவருவது.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற வள்ளுவர் வாய்மொழியை விளக்குவதாம்.

நமது பார்வைக்கு வந்த சித்திரை வைகாசிப் பத்திரிகைகளில் 'ஜல தோஷம் கெர்ப்பிணிகள் கவனிக்க வேண்டியவை குழந்தைச்சாவு, பிள்ளையைப் பாதுகாக்கு முறை, பெரியோர் வாக்குகள், தண்ணீரும் தேக ஆரோக்கியமும் (டாக்டர் ராவ் சாகேப் U ராமராவ் M. L. C.) என்ற அரிய ஆரோக்கிய விஷயங்கள் தமிழில் விளங்கு நடையில் 'எழுதப்பட்டிருப்பதுடன் ஆங்கிலத்திலும் வைத்தியப்பட்டதாரி

களால் உயரிய மருத்துவ நுட்பங்கள் எழுதப்படுள்ளன. தாய்மார்களின் சுகவாழ்வையும் குழந்தைகளின் முன்னேற்றத்தையும் பெரிது கருதியுழைத்து வரும் நமது மாகாணக் கவர்னர் மாட்சிமிக்க வில்லிங்டன் பிரபு அவர்களின் மனைவி யார் மேரி வில்லிங்டன் அவர்கள் நல்லுரை பத்திரமும் அளித்து கௌரவித்திருப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசித்து ஆதரிக்கவேண்டுமென்பதை வற்புறுத்துவதாம் திருவாங்கூர் மகாராஜா முதலிய பிரமுகர்களும் ஸ்தல ஸ்தாபன கர்த்தர்களும் இதனை ஆதரித்து வருவது மகிழ்ச்சி பயப்பது

கல்வியிலாகாத் தலைவரும் இப்பத்திரிகையை ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் பயன்படும்படி செய்வது அவசியமானதே. வருட சந்தா ரூபாய் மூன்றுடன் வெளியிடப்பெறும். இப்பத்திரிகை ஒவ்வொரு தமிழகத்துக்கும் இன்றியமையாத கற்பக தருவாதலின் தமிழகத்தார் இதற்குச் சந்தாதாராகித் தமிழ் நாட்டுக் குழைக்க முன்வந்திருக்கும் டாக்டர் அன்னுதாமஸ் அம்மையார் முயற்சியை தழைத்தோங்கச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் எல்லாம் வல்ல இறைவன் இப்பத்திரிகை இனிது நடை பெற்றுப்பெருகப் பேரருள் பாலிப்பானாக

"தமிழ் நாடு"

"சேலம்". 13வ மே 1923

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும். (ஆசிரியர்:—டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள், பிரசுரிக்குமிடம்:—திருநெல்வேலி. வருஷ சந்தா ரூ, 3)

"ஆரோக்கியமும் சுகவாழ்வும்" என்ற மாதாந்த சஞ்சிகையின் முதல் பிரதி வரப்பெற்றோம். இதன் ஆசிரியராகிய டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள் திருநெல்வேலி ஜில்லாவில் மருத்துவம் பார்ப்பதில் பெயர் பெற்றவர். ஆகவே இவரால் நடத்தப்படும் பத்திரிகை தாய்மார்களுக்கு மிகுந்த பயனளிக்கு மென்பதில் சந்தேகமில்லை சிசுக்களின் மரணம் பெருகிவரும் நமது நாட்டில் இத்தகைய சஞ்சிகைகள் இன்றியமையாததாகும். முதல் பிரதியில் தாய்மார்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல முக்கியமான விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்விஷயங்களை நாம் படித்துப் பார்த்து மிகவும் திருப்தியடைந்தோம். நல்ல சந்தர்ப்பத்தில் நமது நாட்டிலுள்ள ஒரு குறையை நீக்க முன் வந்த நமது ஆசிரியருக்கு நாம் மனமார்ந்த வந்தனமளிக்கிறோம். இச்சஞ்சிகையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் விஷயங்கள் தோன்றிவரும். ஒவ்வொரு சகோதரியும் இச்சஞ்சிகைக்குச் சந்தாதாராகச் சேர்ந்து அதைப் படித்து பலனடையக் கோருகிறோம்.

விஸ்வகர்மன் தொழில்

சென்னை.

திருநெல்வேலி டவுனில் வெளிவரும் 'ஆரோக்யமும் சிசுவின் சுகவாழ்வும்" Health and Infant-Welfare என்னும் ஓர் மாதப் பத்திரிகையின் முதற்பிரதி நமது பார்வைக்கு வந்திருக்கின்றது இதன் பத்திராதிபர் ஸ்ரீமதி டாக்டர் அன்னுதாமஸ் அம்மையாரவர்கள். இவர்கள் சுமார் எட்டு வருடங்கள் வைத்திய உலகில் நன்கு பழகி பால்ய தாய்மார்களின் கஷ்டங்களையும் சிசுக்களின் நோய்களையும் செவ்வனே யுணர்ந்திருக்கின்றனர். இக்காலத்திலுள்ள வைத்ய சிகாமணிகள் பலர் பணம் சம்பாதிப்பதையே பெரிதெனக் கொண்டிருப்பினும் நமது டாக்டர் அன்

னா தாமஸ் அம்மையார்போன்ற பரோபகாரிகளும் சிற்சிலருண்டு. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே வைத்தியர்களின் நோக்கமாயிருக்கவேண்டுமென விளக்குவதற்கு நமது டாக்டர் அம்மையாரவர்களே போதிய சான்றாகும்.

தெய்வ பக்தி நிரம்பிய இப்பாரத நாட்டிலே மூடபக்தியும் அதிகமுண்டு. எல்லாம் இறைவன் திருவிளையாடல்கள் தான், அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதும் உண்மைதான். ஆயினும் முள்ளை முள்ளாலேயே வாங்கவேணடும் என்னும் பழமொழிக்கிணங்க ஸ்தூல சரீரத்திற்றோன்றும் பிணிகளுக்கு மருந்து கொடுத்தலும் சிகிச்சை செய்தலும் வேண்டும். மந்திரத்தால் மாங்காய் விழாது தெய்வ பக்தியால் மாங்காய் விழாது, மாங்காய் வேண்டுமானால் கையாலோ அல்லது கருவியினாலோ அருத்துத்தானாக வேண்டும்.

இஃதன்றியும் நமது முன்னோர்களின் வழக்கத்தாலோ இப்போதுள்ளவர்களின் அறிவீனத்தர்லோ பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாகம் என்பது இன்னதென்று தெரிவதற்கு முன்னரே எல்லா காரியங்களையும் நடத்தி விடுகின்றனர். ஆகவே சில சமயங்களில் பதினொன்று அல்லது பதினைந்து வயதுள்ள பெண் குழந்தைகள் தாய்களாக மாறி விடுகின்றனர், இவரது இளமையாலும் கல்வி இன்மையாலும் இவர்களது கடமைகள் இவருக்குத் தெரிவதில்லை குடும்பிகளின் கடமை இன்னதென்றும் குழந்தைகளைப் பெற்றுவளர்ப்பது இங்ஙனமென்றும் தெரியாமையால் நமது நாட்டில் சிசுமரணம் அதிகமாகவிருக்கின்றது. இப்பரிதபிக்கத்தக்க நிலையை மாற்றவும் சிசுக்களைப் பாதுகாக்கவுமே நமது அன்னாதாமஸ் அம்மையார் தீர்மானித்துள்ளார்கள். இவர்களது பத்திரிகையில் சுகவழிகள் பல கூறப்பட்டிருக்கின்றன. சுகவாழ்வின் இரகசியங்களை உலகில் பரவி உலகின் துன்பங்களை அகற்றவிரும்பும் பரோபகாரச் சிந்தையையுடைய நமது டாக்டர் அன்னா தாமஸ் "அம்மையவர்களுக்கு உத்சாகம் உண்டாகும்படி நாம் அனைவரும் அவரது பத்திரிகைக்குச் சந்தாதாரராக வேண்டுவது நமது கடமை என்றே நினைக்கிறோம்.

அயல் நாடுகளைவிட இந்த தேசத்தில் மாணத்தொகை அதிகமாயும் பால்ய மரணம் மிகுதியாயுமிருப்பது நமக்கு சுகவழி தெரியாமையால் என்பதில் சந்தேகமில்லை. இனியேனும் அசட்டையாயிராது நமது சகோதர சகோதரிகள் சுகவழியின்னதென்றுணர்ந்து அவ்வழியில் நடப்பார்களென விரும்புகின்றோம். இப்பத்திரிகையில் அடங்கியுள்ள உயர்ந்த விஷயங்களையும் இதன் சந்தாவையும் நோக்க இதை நடத்துபவர் ஒரு சல்லி அளவேனும் இதிலிருந்து ஊதியம் பெறுவது முடியாதென்று நாம் உறுதியாகக் கூறத் துணிகின்றோம். இத்தகைய பரோபகாரப் பத்திரிகையை ஆதரிப்பது பொது ஜனங்களின் கடமையாதலால் உடனே கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவேண்டும், வருடசந்தா ரூ 3 பிரதி ஒன்றுக்கு அணா 6 டாக்டர் அன்னாதாமஸ் அம்மையார் பத்திராதிபர் "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்"

திருநெல்வேலி டவுண்.

'சமரஸபோதினி

தஞ்சாவூர் ஜூன் மீ 4வ.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும். இப்பெயர்கொண்ட மாத சஞ்சிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றோம். இது ஓர் ஆங்கிலத் தமிழ் மாதப் பதிப்பு. திருநெல்வேலியினின்றும் ஸ்ரீமதி அன்னா

தாமஸ் அவர்களால் வெளியிடப்பட்டு வருகிறது. குழந்தைகளை வளர்க்கும் விதமும், அவர்களுக்கு ஆதிமுதல் எவ்வித பயிற்சி கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றியும், பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய பல முக்கிய விஷயங்களும் இச் சஞ்சிகையின் வாயிலாய் வெளியிடப்பட்டுள்ளது. குழந்தைகளின் முன்னேற்றத்தைக் கருதும் தாய் தகப்பன்மார்களுக்கு இப்பத்திரிகை அவசியமானதென்றே நாம் கூறுவோம். இதன் வருட சந்தா ரூ. 3. பத்திராதிபர், ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும், திருநெல்வேலி என்ற விலாசத்திற் கெழுதிக்கொள்ளவும்.

'ஆத்ம போதினி'

திண்டுக்கல் மேமீ

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இதனை திருநெல்வேலி டவுன் நமது இந்திய மாதரத்தனம் அன்னா தாமஸ் அம்மாளவர்கள் வெளியிடுகிறார். இம்மாது சிரோண்மணி தம் அனுபோக சாக்ஷியாக சிசுக்களை உற்பத்தித்தல், நோயணுகாது காப்பாற்றல் முதலிய அரிய பெரிய விஷயங்களை எழுதிவருகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலுமிருக்கவேண்டிய அருமையான பத்திரிகை இப்பத்திரிகை. இதற்கு நமது சென்னை கவர்னரின் அருமைப்பத்தினியார் நற்சாக்ஷி அளித்திருக்கிறார்கள், இதற்குவருட சந்தா ரூ. 3.

'ஹிந்து நேசன்'

சென்னை மே 26–1923

'ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்' இது ஓர் ஆங்கிலத் தமிழ் மாதப் பத்திரிகை. டாக்டர் மிஸ்ஸஸ் அன்னா தாமஸ் என்னும் வைத்திய விற்பன்னையால் நடத்தப்படுவது. இயற்கை யனுபவங்களைச் செயற்கை யனுபவங்களாக மாற்றிக்கொண்டு சரீரக் கூறுபாட்டிற்குத் தகுந்த பிரகாரம் அந்த அனுபவங்களை ஆசிரயித்துக் கொள்ளுவதே வைத்திய முறையெனக. ஆரோக்கியானுகூல முறைகளை நன்றாகக் கற்று அப்பியாசத்திற்குக் கொண்டுவருவதனால் ஜனங்கள் க்ஷேமமும் சிசுப் பாதுகாப்பும் செவ்வையாக ஏற்படும். ஆனால் இந்நாட்டிலுள்ள ஜனங்களில் எத்தனை பேர் ஆரோக்கிய முறைகளை அறியும்படியான அறிவை அடைந்திருக்கிறார்கள் என்று நாம் சிறிது கருதவேண்டும். அவசியமாயுள்ள ஆரம்பப் படிப்பையே அனுமதிக்காமல் கேவலம் உண்பதும் உறங்குவதுமாயிருக்கும் இக்காலத்தில் நம் தேசத்துப் பெண்மணிகள் ஆரோக்கிய முறைகளைத் தினசரி நடவடிகளுக்குக் கொண்டுவந்தாலன்றிக் குழந்தைகளின் பாதுகாப்புக்குப் போதுமான ஆசக்தி இராதென்பது எமது துணிபு. ஆகவே சுகவாழ்வைக் கருதிய சகல அம்சங்களையும் நம் தேசமாந்தர் எளிதில் அறியும்படி எவர் எப்படிப்பட்ட முயற்சி செய்தபோதிலும் அதற்குப் பெருமையும் புகழும் உண்டாவதற்குத் தடையென்ன? இங்ஙனம் பாகுபாடறிந்து செய்யப்படும் முயற்சிகளில் டாக்டர் அன்னா தாமஸ் என்னும் மாதரால் ஆரம்பித்துத் தற்போது நடத்திவரும் பத்திரிகா முயற்சியும் ஒன்றாகும். இதில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வியாசங்கள் காணப்படுகின்றன. இது சகலருக்கும் எட்டும்படியாக வருஷ சந்தா 3 ரூபாயாக நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்போது நம் முன்வந்திருப்பது முதற் சம்புடத்தின் இரண்டாவது சஞ்சிகையாகும் பத்திரிகை. ஆரம்பிப்பது பெரிதல்ல; ஆரம்பித்து நடத்துவதே சிரமம்; அதைப் பொருட்படுத்தாமல் தம் சாதாரசோதரிகளாகிய மாந்தருக்கு மண்டலத்தில் ஆயுராரோக்ய சம்பத்துக்களை நிலைக்கும்படியான நன்மார்க்

சத்தை இதன் மூலமாக பிரகடிக்கும் பத்திராசிரியையின் முயற்சி பலிதமாகிப் பலன் கொடுக்குமாக. இப்பத்திரிகையை நமது நேயர்கள் ஆதரிக்க முந்துவார்களென்றே நம்புகின்றோம்.

சுகாபி விர்த்தினி

புதுவை, மே 15—1923.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும் இப்பெயர்தாங்கிய மாதசஞ்சிகை புத்தக ரூபத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும விஷயங்கள் பரிமளிக்கவாப்பெற்றுப் படித்து மகிழ்பூத்தனம். எண்ணற்ற பத்திரிகைகள் நம் இந்தியாவிற்பிறந்து அவற்றுள் பொது மகாஜனங்களுக்காகும் சகாசுகங்களைத் தேடவும் விலக்கவும் வேண்டிய பலவேறு வகைகளைத் தத்தம் தெள்ளிய நல்லறிவிற் றோன்றியவண்ணம் லோகோபகாரமாக வெளிப்படுத்திவரும் பரமகாருண்யர்களில் ஒருவரேனும் அஸ்திபாரம் பலமாக இருந்தால்தான் மேலே கட்டிடம் பலநாளிருக்குமென்பதுபோல் சிசுக்களாகவிருக்குபபோதே அவைகள் சுகமாக வளர்வதற்கு வாய்ப்பான வழிகளைத் துலக்கும்படியான இதுபோன்ற உயர்தர பத்திரிகைகள் சில இதுகாறும் தோற்றுவிக்காதிருந்தது நமதேசத்திற்குப் பெருகுறைவேயாகும். இஃதின்னு முற்பட்டகாலத்தில் தோன்றிலதால் எவ்வளவோ சிசுக்கள் க்ஷீணகதியுற்றிருக்குமென்று சொல்லுதலாகும். இச்சமயம் இப்பத்திரிகை இங்கு அத்யாவசியமேயாகும். இதிற் பேசப்படும் விஷயங்கள் அவ்வளவும மகாஜனங்களின் சுகத்திற்கு ஆதாரமானவைகளும் அபிவிருத்திகேற்றதாகவுமிருக்கின்றதுடன் தாய் தந்தை மைந்தர்கள் தேக ஆரோக்கியத்துடன் இல்லற வாழ்க்கையையினிது நடத்தற் குறறதுணையாகவு மிருக்குமெனலாம் ஆதலின் இப்பத்திரிகை ஒவ்வொரு இல்லத்திலும் சகோதரர்கள் கடமையாக வாங்கி வாசித்தல் வேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்துவோம். இதனாசிரியர் ஸ்ரீ மதி டாக்டர் அன்னாதாமஸ் அம்மாள் என்பவராகும். இவர் ஆயுர்வேத ஞானமும் அமையப்பெற்றவராயிருத்தலின் எத்துணையோ சிறந்ததெனக் கொள்ளல்வேண்டும். இதன் வருடச்சந்தா ரூ. 3 0 0 தனிப்பிரதி 1—க்கு 0 6 0 வேண்டுவோர் பத்திராபர் டாக்டர் அன்னாதாமஸ் அம்மாள் திருநெல்வேலி என்ற விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம் நமது சுகாபிவிருத்தினியையு மபிமானித்துத் தம் பத்திரிகையை அனுப்பிய ஆசிரியருக் குநன்றியறிந்த வந்தனங்கூறி அவ்வப்போதும் அங்ஙனமே நம்பத்திரிகையையும் அனுப்பக்கடமை பூண்டுளோம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

மே—1923.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:- இவ்வாங்கிலத் தமிழ்ப் பத்திரிகை பலநாளாகத் தமிழ் நாட்டிலிருந்த ஒரு பெருங் குறையை நிவர்த்திக்கத் தோன்றியிருக்கிறது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" அறிவின்மையினால் சுகாதார நெறிதவறி நடந்து அகால மரணமடையும் இந்திய மக்கள் எத்தனையோ பலர், அரும் பற்ற குழந்தைகளை யமன்கை கொடுக்கும் இந்திய அன்னைமார் எத்தனையோ பலர். சிசு மரணமும் தொற்றுநோயால் நேரிடும் மரணம் இந்தநாட்டில் வசம்புகடர் ததிகமாயிருப்பதுபோலப் பிறிதெந்த நாட்டிலுமில்லை. இதற்கு காரணம் அறியாமை. இவ்வறியாமையை நீக்குதற்கு எழுந்த "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" என்னும் பத்திரிகை தமிழ் நாடெங்கும் பரம்ப

வேண்டும் மென்பது எமது கோரிக்கை. இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமதி டாக்டர் அன்னுதாமஸ் அம்மாள் வைத்தியற் றேர்ச்சிபெற்ற இவ்வம்மையார் தமது கல்வியின் பயனாகக் கிடைத்த அறிவைத் தாய்மொழி மூலமாக அனைவர்க்கும் பரப்புதற்கு முன வந்திருக்கிறமையால் அவர் வெளியிடும் பத்திரிகையைப் பெற்று பயனடைவது தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகள் கடனாகும். "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" என்னும் மாதப்பத்திரிகை நிருவாக தலைவர், திருநெல்வேலி என்றெழுதிப் பெற்றுக்கொள்க. வருட சந்தா ரூபாய் மூன்று.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம், மே 21—1923.

'ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்' இது தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலியிருந்து மாசந்தோறும் சஞ்சிகை ரூபமாக வெளிவரும் ஒரு ஆங்கிலத் தமிழ்ப் பத்திரிகை. இதன ஆசிரியர் டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள் இதன் முதலாம் இரண்டாம் சஞ்சிகைகள் யாம் பார்த்துள்ளோம் இவ்விரு சஞ்சிகைளிலும் தேகாரோக்கியத்திற்காக வேண்டிய முறைகள் பொதுவாகவும், பிள்ளைகளின் சுகவாழ்வைக் குறித்துச் சிறப்பாகவும் எழுதப்பட்டுள்ளன சிசு மரணமும் பிரசவ காலத்தில் மரணமும் இந்தியா இலங்கை என்னும் இரு நாடுகளிலும் இப்படிப்பட்ட ஒரு பத்திரிகை இருத்தல் மிக நன்றாம். ஒவ்வொரு தாய்மாரும் இப்பத்திரிகையைக் கிரமமாக ஏற்படுத்தி அதன்படி ஒழுகிவருதல் வேண்டும் இதனை நன்றியறிதலுடன் ஏற்கவும்.

பட்டு!   பட்டு!!   பட்டு!!!

காசி பட்டுச் சேலைகள் முதலியன சகாயமாக அனுப்பப்படும்.

விலை ஜாபிதா 'இனாம்'

மானேஜர் —

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO.,
PITAMBER BUILDINGS,
BENARES CITY.

விஸ்வகர்மன் தொழில்

விஸ்வகர்ம குலஜன மேம்பாட்டிற்கு உழைக்கும் வாரப்பத்திரிகை

வருடச் சந்தா ரூ. 4 மட்டும்.

பத்திராதிபர்:

மங்கலம் தியாகசுந்தர வேதாச்சல ஆச்சாரி B. A.,

சந்தாதாராகயிருக்க விரும்புவோர் அடியிற்கண்ட மேல்விலாசத்திற்கு உடனே எழுதவும்

மானேஜர்.

'விஸ்வகர்மன் தொழில்'
5/10 வேதகிரி மேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

தேசாபிமானி

(வாரமிருமுறை)

யாழ்ப்பாணத்திலிருந்து பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பிரசுரிக்கப்படும். ராஜீயம, பொருளாதாரம் முதலாய வியாசங்கள் எழுதப்பட்டுவருகின்றது.

விளம்பரங்கள் போடுவதற்குத் தகுந்த பத்திரம் இதுவே.

வருட சந்தா ரூபா. 9 0 0

ஆசிரியர் T. P. மாசிலாமணி,

Apply to :—
THE MANAGER,
"DHESAPEMANI"
Jaffna (Ceylon).

தமிழ் உலகத்திற்கு ஓர் அறிக்கை

எழுமின்!   விழியின்!!

தமிழர் போதினியை வாசியுங்கள்

இது யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஓர் அரிய சஞ்சிகை. பிரபல பத்திரிகாசிரியர்கள், தேசாபிமானிகள், கல்விமான்கள் முதலிய பெரியோரால் பெரிதும் பாராட்டப்படுவதும், அரசியற் குறைகளை அஞ்சா நெஞ்சுடன் வெளியிடுவதும், பாமரசனத்தை முன்னேற்ற வல்லதும் இதுவே.

வருட சந்தா   இலங்கை, இந்தியா ரூ. 3/-
,,   சிங்கப்பூர், மலாய்நாடு ,, 4/-

தமிழர் போதினி ஆபீஸ்,
P. O. வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம் [இலங்கை]

பைந்தமிழ்

சித்திர விளக்கத்துடன் உள்ள ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை. அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும், சுவையுடனும் பல பிரபல வித்வான்களால் எழுதப்பட்ட அநேக வியாசங்கள் உள்ளது. தமிழ் நாட்டு ஆண் பெண்களுக்கு அறிவையூட்டுவது.

வருஷ சந்தா விபரம்

உள் நாட்டுக்கு	ரூ.	2	8	0
வெளி நாட்டுக்கு	,,	3	12	0
தனி சஞ்சிகை	,,	0	4	0

சந்தாதாராகச் சேர்ந்தால் பரிசுகள் கிடைக்கும்.

கே. ஜகதீசன், பி. ஏ.,
"பைந்தமிழ்" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

தத்துவ இஸ்லாம்தான்

தாருல் இஸ்லாமாய்விட்டது

தாருல் இஸ்லாம்

இஃதோர் உயர்தர மாதாந்தச்

செந்தமிழ்ப் பத்திரிகை

இஃது இனிய தமிழில் உயர்ந்த நடையில அதிரஸத்துடன் ஆனந்தமயமாய் எழுதப்பட்ட அநேக அருமையான வியாசங்களையுடையது. தமிழ் நாட்டுச் சோதர சோதரிகளுக்குத்தக்க அறிவையூட்டுவது இஸ்லாத்தின் உயரிய தன்மையை உரைத்து விளக்குவது. ஸமரஸ நோக்கங் கொண்டது இஸ்லாத்தின ராஜீயதேசிய ஞானத்தை எடுத்துணர்த்துவது. தமிழ் மொழி வளர்ச்சியில் மிக ஊக்கங்கொண்டது.

இது ராயல் 8 பக்கங்கொண்டது, 48 பக்கம் முழுதும் விஷயங்களே அடங்கியது. உயர்ந்த கிளேஸ காகிதத்தில் மிக சோத்தியாக அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் [illegible]முதல் தேதியிலும் வெளியாகின்றது

[illegible] சந்தா ரூ. 3. வெளிநா[illegible]களுக்கு ரூ. 4

[illegible]இஸ்லாம் 4-ம் சமல[illegible] ரூ. 3 0 0

[illegible] ,, ரூ 0 10 0

[illegible]ருல் இஸ்லாம் ஆபீஸ்,

[illegible]6, 17, ஸத்திண்டு லேன் பீச்,

மதராஸ், Madras.

கற்பகம்

[illegible]ர் செந்தமிழ் மாத சஞ்சிகை

வருஷ சந்தா	ரூ.	1	0	0
வெளிநாட்டிற்கு ,,	ரூ.	1	8	0

[illegible]இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், [illegible]கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க [illegible]ஞங்க சீர்திருத்தங்கள் நூதன கற்பிதங்கள், மதவிஷயம் சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம். வர்த்தமானம் விநோதக்கூற்று, முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர்,

கற்பகம் ஆபீஸ், புதுவை.

ஜனரஞ்ஜனி

உயர்தர மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

இதில் இலக்கியம், சித்திரக்கலைகள், ஜீவிய சரித்திரம், தேச சரித்திரம், சரித்திர ஆராய்ச்சி, ஜனஸமூகம், மதம், தத்துவ சாஸ்திரம், வைத்தியம், கதைகள், நாவல்கள், சிறு கதைகள், வேடிக்கை விநோதங்கள், ஜன இயல்பு முதலிய பல வியாஸங்களும் விஷயங்களும் வெளிவரும்.

வருஷ சந்தா	ரூ.	2	0	0
வெளிநாடுகளுக்கு	ரூ.	3	0	0
தனிப்பிரதி	,,	0	4	0

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு		ரூ.	6	0	0
,,	½	,,	3	0	0
கவர் பக்கம்	1	,,	8	0	0
,,	½	,,	4	0	0

விசேஷ இடங்களுக்கு கால்மடங்கு அதிகம்.

வி. நாராயணன் அண்டு கம்பெனி,

4, கொண்டி செட்டி தெரு, மதராஸ்.

Talismans and Charms

For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.

	Rs. A.
For Success in Spiritual & Religious Life	10—0
For Honour, Riches, Learning and Greatness	7—8
For Health, physical Strength, &c.	7—8
For Power of Eloquence, Speeches, &c.	7—8
For Success in any undertaking or Litigation, &c.	10—0
For Success in Sport, Racing, Cards, Games of Chance	7—8
For Success in Trade, and Business	10—0
For Mens Love to women	7—8
For Woman's Love to man	10...0
For Love of Opposite Sex, attractive power	7—8
For Agricultural prosperity. Farming Good Crops etc	7—8
For Success in Mining Plumbago &c.,	100—0
Rabbi Solomon's Special Talisman for every success	15—0
Specially valued and worn by every successful hebrew 2nd quality.	21—0
1st quality	30—0
For success in Gemming	225—0

NOTE—**A Money Order will bring the Talisman to your door. Always the full amount should be remitted in advance No. V. P. P.**

Extensive Life Reading 15—0

Two Rs. 25—0., Three Rs. 30—0., or more at Rs. 10—0 per reading.

D. A. RAM DUTH,
ASTROLOGER,
No. 30 & 76 (H.W.) Cheku Street, COLOMBO, (Ceylon)

Awarded First Class Certificates and Gold Medals by The Ayurvedic Conferences and Exhibitions 1919, 1920, 1921, 1922, and 1923.

'Siddha Kalpa Makaradhwaja'

The Wonderful Discovery in the Medical World.

For all "Acute" and "Chronic" Diseases.

Prepared Scientifically by, Ayurveda Ratna Pandit,

N. V. SRI RAMACHARLU, Ph D. Sc.

Managing Director and Senior Physician of

The Madras Ayurvedic Pharmacy, Ltd., Madras

This unparalleled and Ancient medicine is prepared in exact accordance with Ayurvedic and Western Modern Principles and carefully tested and standardised by expert analysts and found to be an unrivalled Elixir for the general prolongation of life, and particularly a guaranteed remedy for Nervous Debility, Skin Eruptions, Ec: Vertigo, Loss of Nerve Power, Bodily Vigour, Memory and Depression of Spirits, constant Mental Misgivings, Gout, Paralysis, Insanity, Hysteria, Dropsy, Diabetes, Pi Consumption, Dyspepsia, all Uterine complaints all sorts o discharges (Acute or Chronic), Irregular menses of all kinds ills peculiar to men and women. This is the only safe and remedy for all diseases resulting from Youthful Indiscretions a of Vitality. It imparts New Life and energy by increasing and fying the blood. It contains such Valuable Ingredients as Si Makaradhwaja, Mukta, Suvarna, Louba and Vegetable Drugs. can be taken also as a Tonic by everyone of either sex without a restrictions of Diet, Season, or Climate. Complete directions are sen with Phial.

One Phial of 60 Pills, for a complete cure Price Rs. 10 (Rs. Ten)

V. P. P. Charge Extra.

Apply to:—The Madras Ayurvedic Pharmacy, Limited.

Post Box, No. 151, MADRAS.

Telegraphic Address:—" KALPAM " Madras. **Telephone: No. 1034.**

Ideal Teacher—பேராசிரியன்

உபாத்தியாயர்களுக்கும், மாணவர்களுக்கும், உபயோகமான மாதாந்தர செந்தமிழ் பத்திரிகை. தனிக்காப்பி அணு 3.

வருடச் சந்தா ரூ. 1—8—0.

பாலர் கதாமஞ்சரி:— ஸரஸ்வதி, ஸுலோசனை, கௌஸல்யா, கனகாங்கி, பீஷ்மன, பரதன், சுக்ரீவன் முதலிய 22 கதைகள் அடங்கியது. 300 பக்கங்கள் ரூ. 2.

குஸுமா:—ஜயபாலர் ஓர் ராஜபுத்திரியின் சாஹசகுணங்களை விளக்கும் நாடகம் அணு 8.

அபிநய கீதங்கள் (Moral Stories in Action Songs) As 5.

பகவத்கீதை வசன சுருக்கம் As. 2.

N. Venktraylu & Son,
96 Thambuchet Street, Madras.

விளம்பரம்

"கஷ்டம் ஒழிந்தது" "மனங்தேருங்கள்" "நிடப்படுவேகள்"
தயாராகிவிட்டது! தயாராகிவிட்டது!!

கைகண்டதும் அபூர்வமான துமான ஔடதங்கள்

...ங்கும் பிரக்யாதி பெற்ற மலையாளவைத்திய முறையிலும் யூனனி வைத்திய... ...லமாக தயார் செய்யப்பட்டு எங்கும் பிரசித்தியானது. கஷ்டமடையும் பிணி... ...ளால் அளிக்கப்பட்ட ஔடதங்களேயாகும்.

... அபிவிர்த்தினி எண்ணெ: இது பலவகை அரிய மூலிகைகளைக் ...செய்யப்பட்டது. மயிர் உதிர்தல் என்னும் நோயை அறவே ஒழித்து ...வளரச் செய்யும். பெண்களுக்கு கூந்தல் இல்லாவிட்டால் குறை... குறைவை அடியோடு ஒழிப்பது இந்த எண்ணெயே என்பதிற் சந்...

...ர்ப்பாகஷாதுளிகை: ஸ்திரீகள் கர்ப்பமாயிருக்கிற காலத்தில் இம் மாத்... ...போயகப்படுத்திவந்தால், கர்ப்ப காலத்தில் சாதாரணமாய் வரும் கை கால் ...பு முதலிய வியாதிகளை கிஞ்சிட்டும் அணுகவொட்டாமல் தடுத்து சுகப்பிர... ...துவாக்குமென்பது திண்ணம.

... அம்மை காய்ச்சல் துளிகை. காய்ச்சல் ஆரம்பித்த உடனே இக் குளிகை... ...யாகப்படுத்துவதினால் வசூரியைவரவிடாமல் தடுத்துவிடும். அல்லாமல் வந்தா... ...ளவு கொரமாயிராது. இலேசாய் இருந்து சீக்கிரம் குணமாகிவிடும்.

4. இராஜாபிவிர்த்தி மதுஸ்மிக அல்வா: இந்த அல்வாவானதுவெகு ஜாக்கிர... ...அநுபவ முறையில் தயாரிக்கப்படும். இவையாவரும் எக்காலமும் உபயோகப்... ...வாம். இதை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு தேக பலம், சரீர அழகு, தேகப்... ...டி, தேக ஆரோக்கியம், தாது விர்த்தி முதலிய சகலவித குணங்களும் உண்டாகும்.

மேற்கண்ட மருந்துகளுக்கு விலை முதலிய சகல விபரங்களுக்கும் அடியிற் கண்ட விலாசத்திற்கு 1 அணா ஸ்டாம்பு சகிதம் எழுதினால் விபரம் தெரிவிக்கப்படும்.

விலாசம். 'மலையாள வைத்தியசாலை'
தெற்குப்புதுத்தெரு, திருநெல்வேலி டவுண்.

TO ALL WHOM IT MAY CONCERN

Please note that we are leaders in the Automobile Line dealing in:—

1. Comprehensive Accessories and Spares for popular Motor Cars, Motor Cycles & Cycles;
2. Genuine Spare Parts for Ford Cars;
3. Reputed Makes of Motor Tyres and Tubes and Sundries therefor;
4. Reliable Lubricating Oils and of proved merit;
5. Dependable Tools and Mec Appliances, indispensable to every M
6. High Grade Paints and Materials and Appliances;
7. Superb Upholstery Materials a Fittings;
8. Serviceable Hardware Supplie Garage Necessities;

We are also Sub-dealers for **Chevro** Cars and Sub-Agents for the famous **Me** Bicycles.

Ram Pal & Co. Ltd.,
TINNEVELLY.

PRINTED AT THE PALAMCOTTAH PRINTING PRESS AND PUBLISHED BY
DR. MRS. ANNA THOMAS, TINNEVELLY.